www.padippakam.com

ஏப்ரல் 2006 ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



தமிழகத் தேர்தல்:
சிகரத்தைத் தொடுகிறது
பொறுக்கி அரசியல்



நிகரில்லா

## பல்கலைக் கிரிமினல் கழகங்கள்

## மாணவர் போராட்டம்!

படிப்பகம்

www.padippakam.com

## "விவசாயிகளின் சிறுநீரகங்கள் விற்பனைக்கு!"

# தாராளமயத்தின் கோரம்

இதை அதிர்ச்சி என்று சொல்வதா? அல்லது, நாட்டுக்கே அவமானம் என்று சொல்வதா?

''எங்கள் கிராமம் விற்பனைக்குத் தயார்!'', ''எங்கள் சிறுநீரகம் விற்பனைக்குத் தயார்!'' - என மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிர மாநிலங்களின் பல கிராமங்களில் அறிவிப்புப் பதாகையுடன் விவசாயிகள் தமது அவலத்தை வெளியுலகுக்குத் தெரிவிக்கும் புதுமையான போராட்டத்தை நடத்தி வருகிறார்கள். தமது உடல் உறுப்புகளையும் தாம் பிறந்து வளர்ந்த மண்ணையும் மக்களையும் பகிரங்கமாக விற்பனை செய்யத் துணிந்து விட்ட விவசாயிகளின் இச்செயல், வழக்கம் போலவே செய்தி ஊடகங்களால் இருட்டடிப்பு செய்யப்பட்டு இப்போது மெதுவாகக் கசியத் தொடங்கியுள்ளது.

''சிறுநீரக விற்பனை மையம்'' என்ற விளம்பரப் பதாகையுடன் ஒரு மூங்கில் கொட்டகை அந்தக் கிராமத்தின் நுழைவாயிலில் காணப்படுகிறது. ''ஆம்! இது உண்மை தான்! நாங்கள் எங்கள் சிறுநீரகங்களை விற்க முடிவு செய்துள்ளோம். பிரதமர் மன்மோகன் சிங்கையும் அரசுத் தலைவர் அப்துல் கலாமையும் இந்தக் கடையைத் திறப்பு விழா செய்து விற்பனையைத் தொடங்கி வைக்குமாறு அழைப்பு விடுத்துள்ளோம்'' என்கிறார்கள் மகாராஷ்டிராவின் அமராவதி மாவட்டத்திலுள்ள ஷிங்னாபூர் கிராமத்து விவசாயிகள்.

''இதில் ஆச்சரியப்படவோ, அதிர்ச்சியடையவோ ஒன்றுமில்லை. நாங்கள் எங்கள் கிராமத்தை - எங்களின் சிறுநீரகங்களை விற்கத் தடை விதிக்காமல் ஆட்சியாளர்கள் அனுமதிக்க வேண்டும். ஏனென்றால் நாங்கள் கடனில் மூழ்கி ஓட்டாண்டிகளாகி விட்டோம். எங்களிடம் விற்பதற்கு எதுவுமில்லை - சிறுநீரகத்தைத் தவிர!'' என்கிறார் சம்பத்கிரி என்ற விவசாயி.

ஷிங்னாபூர் மட்டுமல்ல; டோர்லி, லெஹேகான், ஷிவ்னி ரசூலாபூர் முதலான மகாராஷ்டிராவின் கிழக்குப் பிராந்தியத்திலுள்ள பல கிராமங்களில் சிறுநீரக விற்பனை குறித்த விளம்பரப் பதாகைகள் தொங்குகின்றன. ''எங்கள் கிராமம் விற்பனைக்குத் தயார்!'' என்ற அறிவிப்புப் பலகைகள் கிராமங்களின் நுழைவாயிலில் நிறுத்தப்பட்டுள்ளன. ''கடந்த 10 மாதங்களில் எங்கள் வட்டாரத்தில் 309 விவசாயிகள் கடன் சுமையால் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போயுள்ளனர். முன்பு எனது நிலத்தில் கிணறு தோண்டி மின்சார மோட்டார் போட்டு விவசாயம் செய்து வந்த நான், இப்போது கடன்சுமையால் நிலத்தை இழந்து நிற்கிறேன். கூலி வேலையும் இப்பகுதியில் கிடைப்பதில்லை. எனது வீட்டில் உணவு இல்லை; துணி இல்லை; மின்சாரமில்லை. தெரு நாய்களைப் போல நாங்கள் பசியால் அலைந்து திரிகிறோம். வெறும் தண்ணீரைக் குடித்து எத்தனை நாட்கள் நாங்கள் உயிர் வாழ முடியும் என்று தெரியவில்லை. எங்களது அவலத்தை வெளியுலகுக்குத் தெரிவிக்க இப்படி விற்பனை அறிவிப்பு செய்வதைத் தவிர எங்களுக்கு வேறு வழியும் தெரியவில்லை'' என்று குமுறுகிறார் அந்த விவசாயி.

ஒரு காலத்தில் ''வெள்ளைத் தங்கம்'' என்று பெருமையாகக் குறிப்பிடப்பட்ட பருத்தி விளையும் கரிசல் காட்டு சொர்க்க பூமியாக விளங்கிய மகாராஷ்டிராவின் விதர்பா பிராந்தியம், இப்போது சுடுகாடாகக் காட்சியளிக்கிறது. கடந்த 15 ஆண்டுகாலமாக நடைமுறைப்படுத்தப்பட்ட தாராளமயம் தோற்றுவித்த பயங்கரம் அப்பிராந்தியம் எங்கும் மரண ஓலமாக எதிரொலிக்கிறது.

''எங்கள் வட்டாரத்திலிருந்து வண்டி வண்டியாக ஒரு காலத்தில் பருத்தியை ஏற்றிச் செல்வோம். இப்போது ஒரு வண்டி அளவுக்குக் கூட பருத்தி இல்லை. மாடுகளை விற்றுவிட்டோம்; இற்றுப் போன வண்டி

**மகாராஷ்டிராவின் ஷிங்னாபூர் கிராமத்தில் விவசாயிகள் தொடங்கியுள்ள சிறுநீரக விற்பனை மையம்.**




தொடர்ச்சி 27-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய— லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 21**

**இதழ் 6**

**ஏப்ரல் 2006**

***உள்நாடு***
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

***வெளிநாடுகள்***
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**



***படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்***

**புதிய ஜனநாயகம்,**
**110, இரண்டாம் தளம்,**
**63, என்.எஸ்.கே. சாலை,**
**(அ.பெ.எண்: 2355)**
**கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024.**
**தொலைபேசி: 94446 32561**


## தேர்தல் கூட்டணிகள்:

# சிகரத்தைத் தொடும் பொறுக்கி அரசியல்

ஓட்டுக் கட்சிகளின் அனல் பறக்கும் பிரச்சாரங்களாலும், செய்தி ஊடகங்கள் வதந்திக் காற்றால் விசிறி விடுவதாலும் தமிழக மக்களுக்கு மண்டைக் காய்ச்சல் ஏற்படுத்தப்படுகிறது. சரியாகச் சொல்வதானால், கடந்த ஆண்டு மத்தியிலேயே வாக்காளர் பட்டியல் திருத்த வேலையின் போதே தேர்தல் பரபரப்புகள் தொடங்கி விட்டன. புதிய வாக்காளர் சேர்க்கைக்கான கடைசி நாளன்று இலட்சக்கணக்கில் போலி வாக்காளர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் கத்தை கத்தையாக கொடுக்கப்பட்டன.

போலி வாக்காளர்களைச் சேர்க்க முயன்றிருப்பது உண்மைதான் என்பது கண்டுபிடிக்கப்பட்டு, அவ்வாறு முயன்றவர்கள் மீது வழக்குப் போடும் முயற்சியில் தேர்தல் ஆணையம் இறங்கியபோது பதறிப் போனது ஆளும் அ.தி.மு.க.தான். அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள் உட்பட பலரும் இந்தக் குற்றம் புரிந்துள்ளனர்; பதறிப்போன ஆளுங்கட்சி உயர்நீதி மன்றத்தில் வழக்குப் போட்டு, அம்பலமாகியது. ஆனால், போலி வாக்காளர்களைச் சேர்க்கவும், வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்படுவதை தாமதப்படுத்தவும் ஆளுங்கட்சி தொடர்ந்து முயலுகிறது. போலி புகைப்பட அடையாள அட்டைகள் தயாரிக்கும் வேலையிலும் கூட இறங்கியுள்ளனர். ஆளுங்கட்சியின் தேர்தல் அராஜகங்களை எதிர்கொள்ள முடியாது என்றஞ்சிய எதிர்க்கட்சிகள், தமிழகம் முழுவதும் ஒரே நாளில் வாக்குப்பதிவு கோரி, அதையே அடைந்துள்ளனர். வாக்காளர் பட்டியல் திருத்த வேலை முடிவதற்குள்ளாகவே, தேர்தல் தேதிகள் அறிவிக்கப்பட வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. உடனடியாகவே தேர்தல் விதிமுறை மீறல்கள் - முறைகேடுகள் பற்றிய புகார்கள், குவியத் தொடங்கிவிட்டன. குறிப்பாக ஆளும் அ.தி.மு.க பல்வேறு முறைகேடுகளில் இறங்கி விட்டது. இலவச சைக்கிள்கள், தையல் இயந்திரங்கள், வேட்டி சேலைகள், கடன்-நிதி வழங்குதல்கள், இன்னும் பல இலவசங்கள், வழங்கி வருவதாக சரமாரியாகப் புகார்கள் கிளம்பியுள்ளன.

•••

ஓட்டுக் கட்சி அரசியலில் ஜெயலலிதா, வைகோ, திருமாவளவன், இராமதாசு ஆகியோர் புதிய சிகரங்களைத் தொட்டிருக்கிறார்கள். தேர்தல் முறைகேடுள் - அராஜகத்தை கிரிமினல்மயமாக்கி தொழில்முறை சுத்தமாகச் செய்வதிலும், அரசியல் இலஞ்ச - ஊழலில் வாக்காளர்களைப் பங்கு பெறச் செய்வதிலும் அ.தி.மு.க.வின் நிரந்தரத் தலைவியும் முதல்வருமான ஜெயலலிதா சாதனை படைத்துள்ளார். ஓட்டுக் கட்சிகளிடையே கூட்டணி அரசியல் ''பண்ணுவதற்கு'' கூடுதல் சீட்டுக்கள், பதவியில் பங்கு என்பதற்கு மேல் வேறு எந்த வகை நியாயமும் தேவையில்லை என்பதை இலக்கண விதியாக நிறுவுவதில் வைகோ, திருமா, இராமதாசு ஆகியோர் சாதனை படைத்துள்ளனர். பதவிக்காகவும் பணத்துக்காகவும் வெட்கங்கெட்டுப் போய் எதையும் செய்யக் கூடியவர் இராமதாசு என்பது மீண்டும் மீண்டும் அம்பலமாகி விட்டது. தனது கட்சி ''ஓ பாசிட்டிவ்'' இரத்தம் போன்று யாருடனும் கூட்டுச் சேரக்கூடியது என்று பெருமை பேசுகிறார் ''உறுமும் புலி'' வைகோ. தன் கட்சிக்கு எம்.எல்.ஏ. சீட்டுக் கிடைத்ததில், தலித் சமுதாயத்துக்கே அரசியல் அதிகாரத்தில் பங்கு கிடைத்துவிடும் என்று புளுகித் திரிகிறார், செரித்த வாழைப்பழமான திருமா.

இலஞ்ச - ஊழல், அதிகாரமுறைகேடுகள் மூலம் பல ஆயிரங்கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களைக் குவிப்பது, அரசியல் எதிரிகளைக் கிரிமினல் முறைகளில் தாக்கிப் பழிவாங்குவது, உழைக்கும் மக்களை அடக்கி ஒடுக்குவது, ஆபாச - ஆடம்பர - உல்லாச - உதாரித்தனங்களில் திளைப்பது போன்ற கேடுகளை 1991-96 ஆட்சிக் காலத்தில் பகிரங்கமாகவே செய்தது ஜெயலலிதா - சசிகலா கும்பல். இதனால் தமிழக மக்களிடமும் ஓட்டுக் கட்சிகளிடமும் இருந்து முற்றிலும் தனிமைப்பட்டு 1996 சட்டமன்ற தேர்தல்களில் படுதோல்வி கண்டு ஆட்சி அதிகாரத்தை இழந்ததோடு, பல கிரிமினல் வழக்குகளிலும் சிக்கியது.

ஆனால், அது குவித்து வைத்திருந்த பல ஆயிரம் கோடி சொத்துக்கள் - கள்ளப் பணத்தை இழந்துவிடவில்லை. அதை வைத்து நீதித்துறையிலும் அரசியலிலும் செல்வாக்குள்ள நபர்களை விலைக்கு வாங்கி வழக்குகளை சமாளித்ததோடு அரசியலிலும் புத்துயிர் பெற்றது.

www.padippakam.com

பாரதிய ஜனதாக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து, 1998 நாடாளுமன்றத் தேர்தல்களில் கணிசமான இடங்களைக் கைப்பற்றி மத்திய கூட்டு மந்திரி சபையில் இடமும் பெற்றது ஜெயலலிதா-சசிகலா கும்பல். தி.மு.க. அரசைக் கவிழ்ப்பது, குற்றவழக்குகளை இரத்து செய்வது ஆகிய தனது இரு கோரிக்கைகளை உடனடியாகவும், தான் விரும்பியவாறும் பா.ஜ.க. கூட்டணி அரசு நிறைவேற்ற மறுத்ததால் ஆத்திரமுற்ற ஜெயா-சசி. கும்பல் மத்திய அரசைக் கவிழ்த்த போது, அதனிடத்தில் தி.மு.க. போய் உட்கார்ந்து கொண்டது.

தி.மு.க. - பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்து, மத்திய அரசிலும் பங்கேற்றதைக் காட்டி இரண்டு போலி கம்யூனிஸ்டு கட்சிகளும், காங்கிரசும் ஜெயா - சசி கும்பலுடன் தேர்தல் கூட்டணி அமைத்தனர். அதுவரை பா.ஜ.க.-தி.மு.க. கூட்டணியின் மத்திய அரசில் அதிகாரசுகத்தை அனுபவித்து வந்த பா.ம.க. திடீரென்று ஜெயலலிதாவுடன் பேரம் பேசி, மத்திய அமைச்சர் பதவிகளைத் துறந்து கூட்டணி அமைத்தது. தனிமைப்பட்டுப் போன தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி 2001 சட்டமன்றத் தேர்தலில் படுதோல்வி கண்டது. அதோடு ஒட்டிக் கொண்டிருந்த வைகோ கட்சியும் படுதோல்வியைத் தழுவியது. அந்தத் தேர்தல்கள் முடிந்த சில வாரங்களிலேயே பா.ம.க. மீண்டும் பா.ஜ.க.-தி.மு.க. கூட்டணி அரசில் போய் சேர்ந்து கொண்டு நாடே நாறுமளவு பா.ம.க. இராமதாசின் பச்சோந்தித்தனம் அம்பலமானது.

1996-2001 ஆகிய ஐந்தாண்டுகளில் நடந்து முடிந்த ஓட்டுக் கட்சிகளின் இந்த சந்தர்ப்பவாத கேலிக் கூத்துக்களால் ஜெயா-சசி கும்பல் வலுப்பெற்று ஜெயா-சசி கும்பல் ஆட்சியைப் பிடித்தது; அசைக்க முடியாத சில நம்பிக்கைகளுக்கு வந்தது. ''எலும்புத் துண்டுகளை வீசி எறிந்தால் கவ்விக் கொண்டு வாலை ஆட்டாத நாய்களே கிடையாது''; அதேபோலத்தான் ஓட்டுக் கட்சிகளும் அவற்றின் தலைவர்களும், சில பதவிகளையும் பணப்பெட்டிகளையும் விட்டெறிந்தால் யாரையும் விலைக்கு வாங்கிவிட முடியும் என்று அக்கும்பல் உறுதியாக நம்பியது.

எனவே, வேறு எந்த ஓட்டுக் கட்சியின் தயவும், கூட்டும் தனக்குத் தேவையில்லை என கருதி, தனது தேர்தல் வெற்றிக்கும், ஆட்சி அமைவதற்கும் காரணமாக இருந்த கூட்டணிக் கட்சிகளை அவமானப்படுத்தி, எட்டி உதைப்பதைப்போல வெளியேற்றினர். ஜெயா-சசி கும்பல் மீண்டும் ஆட்சிக்கு வருவதற்குக் காரணமாக இருந்த மூப்பனார் காங்கிரசு, இரு போலி கம்யூனிஸ்டு கட்சிகள், பா.ம.க. இராமதாசு ஆகியோர் கொஞ்சமும் வெட்கமின்றி ஜெயலலிதா மீது பழிபோட்டு விலகும்படியானது. நாட்டையும் ஆட்சியையும் வழிநடத்தும் தகுதி வாய்ந்தவை என்று கூறிக் கொள்ளும் இந்தக் கட்சிகள் ஜெயா-சசி கும்பலைப் பற்றி என்ன மதிப்பீடு வைத்திருந்தன? ''ஜெயலலிதாவை நம்பி ஏமாந்தோம்; துரோகம் செய்துவிட்டார்'' என்று கூட சொல்லவில்லை; அவர் மாறிவிட்டார் என்று புலம்பினர்.

அடுத்து, 1996 தேர்தல்களில் தன்னைத் தோற்கடித்த மக்களைப் பழிவாங்கும் வேலையில் ஈடுபட்டது ஜெயா-சசி கும்பல். பல ஆயிரம் கோடி ரூபாய் அளவு வரி, கட்டணங்களை சுமத்தி சுமையேற்றியது; நெசவாளர்களை கஞ்சித் தொட்டிக்கும், விவசாயிகளை எலிக்கறி தின்னவும், தொழிலாளர்கள் வேலை இழக்கவும், அதே சமயம் பன்னாட்டு நிறுவனங்களுக்கு நடைபாவாடை விரிக்கவும் செய்தது; நெசவாளிகள், தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், அரசு ஊழியர்களை அடக்கி ஒடுக்கியது. அன்னதானங்கள், குடமுழுக்குகள், ஆறுகால பூசைகள் நடத்தியது. மதமாற்றத் தடைச்சட்டம், ஆடு-கோழி வெட்டத் தடைச் சட்டம், அரசு ஊழியர்களின் ஊதிய உரிமைகளைப் பறித்ததோடு, அவர்கள் போராடியபோது வேலை பறிப்புச் சட்டம், வீடு புகுந்து தாக்குவது, இலட்சக்கணக்கில் சிறை,





**2001 சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. பக்கம் இருந்த த.மா.கா., போலி கம்யூனிஸ்டு கட்சிகள் (மேலே), நாடாளுமன்றத் தேர்தலின் பொழுது தி.மு.க. பக்கம் சேர்ந்தன: இந்த அணி சேர்க்கைக்கு அடிப்படை கொள்கையா? கொள்ளையா?**



படிப்பகம்

www.padippakam.com

வேலை பறிப்பு எனப் பாசிச அடக்குமுறையை ஏவியது.

இராமதாசு, வைகோவைப் போலவே, பா.ஜ.க. கும்பலோடு கூட்டணி அரசில் பங்கு வகித்து ஆதாயம் அடைந்திருந்த தி.மு.க., கடைசி நேரம் வரை அதை அனுபவித்துவிட்டு, ஜெயலலிதா - பா.ஜ.க. எதிர்ப்பு அலைவீசுவதை சாதகமாக்கிக் கொண்டு இவ்விரு கட்சிகள் தவிர அனைத்துக் கட்சிகளின் கூட்டணி அமைத்து 2004 நாடாளுமன்ற தேர்தல்களில் ஏகபோக வெற்றி கண்டது.

தமிழக மக்களின் வெறுப்பும், பிற அரசியல் கட்சிகளிடமிருந்து தனிமைப்பட்டும், தேர்தல்களில் படுதோல்வியும் அடைந்த ஜெயா-சசி கும்பல் தனது அரசியல் அணுகுமுறையை அடியோடு மாற்றிக் கொண்டது. முதலில் மக்களுக்கு எதிரான பார்ப்பன - பாசிச அடக்குமுறை நடவடிக்கைகளை திரும்பப் பெற்றுக் கொண்டது. அடுத்து, பல ஆயிரங்கோடி ரூபாய் இலவசத் திட்டங்களைக் கொண்டு வந்தது. அரசு சொத்துக்களைத் தானும் தனது கட்சியினரும் மட்டும் பங்கு போட்டுக் கொள்ளையடிப்பதை நிறுத்தவில்லை. அரசு ஆதாயங்களை வாக்காளர்களுக்கும் பங்கு வைப்பது என்ற புதிய உத்தியை அமலாக்கியது.

அன்னதானங்களுக்கும், கஞ்சித் தொட்டிக்கும், எலிக்கறிக்கும் தள்ளப்பட்ட ஏழை எளிய மக்கள், விவசாயிகள், நெசவாளர்களுக்கு உணவு பொட்டலங்கள் வழங்குவது என்ற வகையில் ஓட்டு வங்கிகளை உருவாக்குவதோடு, தனது கட்சியினர் பொறுக்கித் தின்ன வழிவகுக்கப்படுவதை அனுபவம் மூலம் உணர்ந்து கொண்ட ஜெயா-சசி கும்பல், அந்த வழியிலேயே ஆட்சியை நடத்துவது என்று முடிவு செய்தது. சுனாமி நிவாரணம், வெள்ள நிவாரணம், ஏழை மாண-மாணவிகளுக்கு சைக்கிள், விவசாயி வீட்டுப் பிள்ளைகளுக்கு நிதி உதவி, மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மூலம் குடும்பப் பெண்களுக்கும் நிதி உதவி போன்றவை மூலம் ரொக்கத் தொகை, அரிசி, மண்ணெண்ணெய், வேட்டி-சேலை, தையல் இயந்திரம் ''இஸ்திரி'' பெட்டி என்று பல ஆயிரம் கோடி ரூபாய் வாரி இறைக்கத் தொடங்கியது.

அரசு சாரா நிறுவனங்கள் மூலம் உதவிகள், சுயவேலை வாய்ப்புகள், நுண்கடன்கள், எய்ட்ஸ் நிவாரணம், வறுமை ஒழிப்பு, சுனாமி-வெள்ள நிவாரணம் என்று பல வழிகளில் மேல்நிலை வல்லரசுகள், உலகவங்கி - ஐ.எம்.எஃப், ஐ.நா. சபை, பன்னாட்டு தொழில்-நிதி நிறுவனங்கள் கொண்டு வரும் திட்டங்களையும் வழங்கீடுகளையும் தனது பொறுக்கி அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொள்வதில் ஜெயா-சசி கும்பல் வெற்றி பெற்றுள்ளது.


தான் கோடி கோடியாகக் குவித்து வைத்திருக்கும் கள்ளப் பணம் - கருப்புப் பணத்தை வாரி இறைத்து வைகோ - திருமாவளவன் இன்னும் பிற கீழ்நிலைப் பிழைப்புவாத, பொறுக்கி அரசியல் பிரமுகர்களையும் பதவிகளையும்-பணப்பெட்டிகளையும் கொடுத்து தன் பக்கம் இழுத்து விடுவதிலும் வெற்றி பெற்றுவிட்டது. இதற்கும் இன்னும் பல பொறுக்கி அரசியல் நடவடிக்கைகளுக்கும் மிக மிக அவசியமான போலீசு-அரசு அதிகாரிகளையும் குறிப்பாக, ஜெயா-சசி கும்பலின் செல்லப் பிராணிகளான போலீசு உளவுத்துறையையும் செய்தி ஊடகங்களையும் கைப்பாவைகளாக்கிக் கொண்டது.

தி.மு.க., காங்கிரசு உட்பட மற்ற பிற அரசியல் கட்சிகள் ஜெயா-சசி கும்பலின் இத்தகைய பிழைப்புவாத - கிரிமினல் - பொறுக்கி அரசியலுக்கு எதிரானவர்கள் கிடையாது. ஜெயலலிதா-சசிகலா கும்பல் இத்தகைய அணுகுமுறையில் முந்திக் கொண்டு விட்டதே என்று ஆத்திரமடைபவர்கள்தாம். நிவாரண நிதி, சுய உதவிக்குழு, நுண்கடன் போன்ற பல திட்டங்கள் தமது அரசு கொண்டு வந்தவை என்று உரிமை பாராட்டிக் கொள்கிறது, தி.மு.க. - காங்கிரசு கூட்டணி. வாக்காளர்களுக்கு இலவசங்கள் அறிவிப்பதில் ஜெயா-சசி கும்பலையும் விஞ்சிவிட இறுதி நேரத்தில் எத்தணிக்கிறது. இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ தரமான அரிசி, வீடுதோறும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, இலவச ''கேஸ்'' அடுப்பு, இலவச மின்சாரம், வேலையற்றோருக்கு மானியம், திருமண உதவித் தொகை, நிலமற்ற விவசாயிக்கு இரண்டு ஏக்கர் நிலம் இப்படி அடுக்கிக் கொண்டே போகிறது. அதேசமயம் தேர்தல் ஆணையம் மூலம் ஜெயலலிதாவின் இலவச வழங்கீடுகளைத் தடுக்க முயல்கிறது. ஜெயா கும்பல் இலவசமாக வழங்குவதைத் தடுப்பது எதிர்விளைவைத்தான் ஏற்படுத்தும். போலீசு-அரசு அதிகாரிகள் ஒருதலைப் பட்சமாக - ஒரு சார்பாக நடக்கக் கூடாது என்று புலம்பிக் கொண்டே, அரசு ஊழியருக்குப் பறிக்கப்பட்ட உரிமைகளைத் திருப்பித் தருவதாகவும் போலீசுக்கு மூன்றாவது ஊதியக் கமிசன் போடுவதாகவும் வாக்களித்துள்ளது.

அரசு அமைப்பின் ஆதாயங்களை - இலஞ்ச ஊழல் கொள்ளைகளை கட்சித் தலைவர்கள் மட்டுமே சுருட்டிக் கொள்வது என்பதோடு காங்கிரசு ஆட்சி காலத்தில் நிறுத்திக் கொண்டார்கள். அவற்றைத் தலைவர்கள் மட்டுமல்ல, கட்சிப் பிரமுகர்கள் - அணிகள் வரை பங்கு போட்டுக் கொள்வது என்பது தி.மு.க. மற்றும் பிற மாநிலக் கட்சிகளில் இருந்தது. ஜெயா-சசி கும்பலோ அந்தக் கொள்ளையில் குவிக்கப்பட்டதை ஒரு பிரிவு மக்களை நிரந்தரக் கையேந்திகளாக மாற்றி தனது விசுவாச ஓட்டு வங்கியை உருவாக்கிக் கொள்வதற்குப் பயன்படுத்துகிறது. மக்கள் நலத்திட்டங்கள் மட்டுமல்ல, பல்வேறு கட்டுமானத் திட்டங்கள் வகுப்பதிலும் இத்தகைய உள்நோக்கங்களோடுதான் இந்த அரசு செயல்படுகிறது.

தனியார்மயம், தாராளமயம், உலகமயமாக்கம் என்ற காலகட்டத்தில் ஓட்டுக் கட்சி அரசியல் என்பதே இவ்வாறான பிழைப்புவாத - கிரிமினல் - பொறுக்கி அரசியலாக பரிணாம வளர்ச்சி அடைவது இயல்பானது தான். நாடாளுமன்ற - சட்டமன்ற அரசியல் நடவடிக்கைகள் எல்லாம் ஏகாதிபத்திய-பன்

**தனது கட்சிக்குப் பதவி வேண்டும் என்பதற்காக கொடியங்குளம் கொலைகாரி ஜெயாவுடன் கூட்டணி வைத்துக் கொண்ட ''தலித் போராளி'' திருமா.**





படிப்பகம்

www.padippakam.com

னாட்டு தொழில் - நிதி நிறுவனங்களுக்கும், மேல்நிலை வல்லரசுகளுக்கும் ஒரு பொருட்டே கிடையாது. இவற்றுக்கு வெளியேதான், அனைத்துக் கட்சிகளின் ஆதரவோடுதான் உலக வர்த்தகக் கழகம், உலக வங்கி - ஐ.எம்.எஃப், புஷ் நிர்வாகம் ஆகியவற்றுடன் நாட்டை மறுகாலனியாக்கும் பல ஒப்பந்தங்கள் கையொப்பமாகின்றன. அவை நேரடியாக அரசு எந்திரத்துடன் உறவு வைத்துக் கொண்டு, மேற்பார்வையிட்டு தமது நோக்கில் இயக்குகின்றன. அரசியல் கட்சிகளை நம்ப முடியாமல்தான் அரசு சாரா நிறுவனங்கள் மூலமாகவும் தனது காரியங்களை - நோக்கங்களை சாதித்துக் கொள்கின்றன.

நாட்டை ஏகாதிபத்திய பன்னாட்டு தொழில் - நிதி நிறுவனங்களுக்கு விற்று மறுகாலனியாக்குவதில் எவ்விதக் கொள்கை வேறுபாடும் இல்லாத ஓட்டுக் கட்சிகள் வெவ்வேறு அணிகளாகப் பிரிந்து நின்று பதவிக்கும் கொள்ளைக்கும்தான் போராடுகின்றன. அதனால் கொள்கைகள் பேசுவதையெல்லாம் மூட்டைகட்டி வைத்துவிட்டு, தனிநபர் தாக்குதல்கள், ஆபாச வசவுகள், 'ரெக்கார்டு டான்சுகள்', கவர்ச்சிப் பிம்பங்களைக் கொண்ட தலைவர்களின் வழிபாடு, தனக்கும் தனது சமுதாயத்துக்கும் தொகுதிப் பங்கீட்டில் அநீதி இழைத்துவிட்டதாக நீலிக் கண்ணீர் வடிப்பது, காயடிக்கப்பட்ட பிராணியைப் போலக் கதறுவது என்று அரசியலற்ற பல வடிவங்கள் முன்னிலைப்படுத்தப்படுகின்றன. இத்தகைய அரசியல் சூழல் காரணமாக சினிமா புகழ், கதாநாயகன் பிம்பங்கள் ஆகியவற்றை வைத்து அரசியலில் தானும் பதவியை பிடித்து விடலாம் என்று விஜயகாந்த், கார்த்திக் போன்றவர்கள் கருதுகின்றனர்.

ஆனால் மக்களோ, குறிப்பாக இளைஞர்களோ, இவை எல்லாவற்றுக்கும் வெளியே யாராவது புதிய சக்தி எழவேண்டும் என்றே எதிர்பார்க்கின்றனர். நாடாளுமன்ற - சட்டமன்ற ஓட்டுக் கட்சி அரசியல் என்ற அமைப்புக்குள்ளாகவே அத்தகைய புதிய சக்தியின் எழுச்சியை எதிர்பார்ப்பது, புதைசேற்றில் வீழ்ந்தவன் தனது கால்களை மேலும் அழுத்தி உந்தி வெளியே வர எத்தணிப்பது போன்றதுதான். முதலில் ஓட்டுக்கட்சி அரசியல் அமைப்புக்கு வெளியே வருவதற்கான முயற்சியும் உறுதியும்தான் இப்போதைய உடனடி தேவை.

●

## நிரந்தர பசுமைப் புரட்சி:

# வந்தது பேராபத்து!

அண்மையில் எனது சொந்த கிராமத்துக்குச் சென்ற போது, "டவுன்ல பொன்னி அரிசியப் பொங்கித் திங்கிற உங்களுக்கு தங்கமணி, சீரகச்சம்பா, குதிரவாலி, கிச்சடி சம்பா அரிசியெல்லாம் தெரியுமா தம்பி?'' என்று கேட்டார் எங்கள் கிராமத்து முதிய விவசாயி.

ஆச்சரியமாகப் பார்த்த என்னிடம், தமிழ்நாட்டில் 30,000-க்கும் மேற்பட்ட நெல் ரகங்கள் இருந்த உண்மைக் கதையை ஆர்வத்தோடு சொன்னார். மணம் வீசும் அரிசி, இரண்டே மாதங்களில் அறுவடையாகும் அரிசி, மருத்துவ குணம் கொண்ட அரிசி, 4 மி.மீ நீளமுடைய மிகச்சிறிய அரிசி, 14 மி.மீ நீளமுடைய பெரிய அரிசி, ஒரு நெல் மணி ஓட்டுக்குள் இரண்டு அரிசிகள் உள்ள அதிசய ரகங்கள் பற்றி அவர் சொல்லச் சொல்ல எனக்கு வியப்பு மேலிட்டது. மண்வளம், தட்பவெப்ப நிலை மற்றும் இயற்கைச் சூழலுக்கு ஏற்பவும் மக்களின் வாழ்க்கை முறைக்கு ஏற்பவும் தமது பாரம்பரிய தொழில்நுட்பத்துடன் இந்திய விவசாயிகள் அரிய வகை நெல் ரகங்களை உருவாக்கிச் சாகுபடி செய்த வரலாறு எனக்குப் பெருமிதமாக இருந்தது.

"ஆனால், இந்த அரிய வகை நெல் ரகங்கள் எல்லாம் இன்று பயிரிடப்படுவதில்லை; அவற்றின் விதை நெல்லும் விவசாயிகளிடம் இல்லை'' என்று அவர் வேதனையோடு சொன்னார். "ஏன் இப்படி ஆயிற்று?'' என்று நான் கேட்டபோது, "40 வருஷத்துக்கு முந்தி பசுமைப் புரட்சின்னு கொண்டு வந்தாங்க; அவ்வளவுதான்; பாரம்பரிய விவசாயம் ஒழிஞ்சுது; வீரிய நெல் ரகங்கள் வந்தது; உரம்-பூச்சி மருந்துகள அள்ளிக் கொட்டுனாங்க; நிலம் விஷமாகிப் புதுப்புது பூச்சிங்க பெருகிச்சு; விவசாயமும் நாசமாகிப் போனது; விவசாயிங்க பாலிடாலக் குடிச்சு செத்தாங்க; தங்கமணியும் சீரக சம்பாவும் காணாமல் போயிடுச்சு'' என்று பசுமைப் புரட்சியால் ஏற்பட்ட பயங்கர விளைவுகளை வேதனையோடு குறிப்பிட்டார், அவர்.

●●●

பன்னாட்டு உரம்-பூச்சி மருந்துக் கம்பெனிகளின் கொள்ளைக்காகவும், அமெரிக்காவின் ஆதாயத்துக்காகவும் கொண்டு வரப்பட்ட பசுமைப் புரட்சி இந்திய விவசாயத்தை நாசமாக்கியது போதாது என்று இப்போது "இரண்டாவது பசுமைப் புரட்சி'' - இல்லையில்லை, "நீடித்த - நிரந்தர பசுமைப் புரட்சி''யைக் கொண்டுவரப் போவதாக ஆட்சியாளர்கள் அறிவித்துள்ளார்கள். அண்மையில் அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் இந்தியாவுக்கு வருகை தந்தபோது, அமெரிக்காவும் இந்தியாவும் இத்தகைய 'புரட்சி'யைச் செய்ய இரகசியமாக ஒரு சதித் திட்டத்தைத் தீட்டியுள்ளன.

விவசாய ஆராய்ச்சி மற்றும் கல்வியில் அறிவார்ந்த முன்முயற்சியைக் கட்டவிழ்த்து விடுவதாக இத்திட்டம் அமையும் என்றும், குறிப்பாக, உயிரி தொழில்நுட்பவியல், மரபீணி மாற்றம் செய்யப்பட்ட பயிர்கள் - உணவுகளில் கவனத்தைச் செலுத்துவதாக இத்திட்டம் அமையும் எனவும் இதன் சூத்திரதாரிகள் அறிவித்துள்ளனர். இத்திட்டப்படி, அமெரிக்க விவசாய உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு இந்தியா விதித்துள்ள அற்பமான கட்டுப்பாடுகள் அனைத்தையும் உடனடியாக நீக்கிவிடுமாறு அமெரிக்கா கோரியுள்ளது. அதை மன்மோகன் சிங் அரசும் விசுவாசமாக ஏற்றுக் கொண்டுள்ளது.

இதன் விளைவாக, இனி அமெரிக்காவிலிருந்து மரபீணி மாற்றம் செய்யப்பட்ட (Genetically Modified) விவசாய உற்பத்திப் பொருட்களும் உணவுப் பொருட்களும் இந்தியாவில் வந்து குவியும். உலகின் பல நாடுகளில் மரபீணி மாற்றம் செய்யப்பட்ட பொருட்களுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதால், அவற்றை விற்க முடியாமல் அமெரிக்கா திண்டாடுகிறது. அமெரிக்காவும் இந்தியாவும் இந்தியாவில் நடத்தப் போகும் 'பசுமைப் புரட்சி'யானது, அமெரிக்காவுக்கு மிகப் பெரிய சந்தையை உருவாக்கிக் கொடுத்துள்ளது. மரபீணி மாற்றம்




படிப்பகம்

www.padippakam.com

செய்யப்பட்ட விவசாயப் பொருட்களால் மனித இனத்துக்கு விபரீத விளைவுகள் ஏற்படும் என்று அறிவியல் உலகம் எச்சரித்துள்ள போதிலும், எவ்விதக் கட்டுப்பாடுமின்றி அவை இந்திய மக்களின் மலிவான உணவுப் பொருட்களாக இனி . அமெரிக்காவிலிருந்து வந்து குவியப் போகிறது.

மேலும், இந்தப் 'பசுமைப் புரட்சி'க்கான விவசாய ஆராய்ச்சிக்கு அமெரிக்கா சல்லிக் காசு கூடச் செலவிடப் போவதில்லை. இந்தியா தற்போது ஏறத்தாழ ரூ. 400 கோடி முதலீடு செய்யத் தீர்மானித்துள்ளது. இதில் ரூ. 300 கோடித் தொகை மரபணு தொழில்நுட்ப ஆராய்ச்சிக்கும், உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சிக்கும் அதன் வழியிலான விவசாய உற்பத்திக்கும் செலவிடப்படும்.



**ஹைதராபாத்திலுள்ள விவசாயப் பல்கலைக்கழகத்தில் தனக்குப் பரிசளிக்கப் பட்ட கலப்பையுடன் ''போஸ்'' கொடுக்கும் 'விவசாயி' ஜார்ஜ் புஷ்.**

அதாவது, அமெரிக்க விஞ்ஞானிகள் இந்தியாவுக்கு வந்து இத்தொழில்நுட்பத்தைக் கற்றுத் தரவும் அதேபோல இந்திய விஞ்ஞானிகள் அமெரிக்காவுக்குச் சென்று பயிற்சி பெறவும் இத்தொகை செலவிடப்படும். இத்தகைய ஆராய்ச்சியில் புதிய வீரிய ரக விதை உருவாக்கப்பட்டால் - அது இந்தியாவில் உருவாக்கப்பட்டால், அதன் அறிவுசார் சொத்துரிமை (TRIPS) இந்தியாவுக்குச் சொந்தம்; அமெரிக்காவில் உருவாக்கப்பட்டால், அதன் அறிவுசார் சொத்துரிமை அமெரிக்காவுக்குச் சொந்தம். அதாவது, இந்திய விஞ்ஞானிகள் அமெரிக்கா சென்று அங்கு புதிய ரக விதையை உருவாக்கினால், அது அமெரிக்காவுக்கே சொந்தம். அந்த விதைக்கான அறிவுசார் சொத்துரிமையின் மூலம் அமெரிக்கா உலகெங்கும் ஆதிக்கம் செலுத்த முடியும்.

சுருக்கமாகச் சொன்னால், நான் உமி கொண்டு வருகிறேன்; நீ அவல் கொண்டு வா; இரண்டு பேரும் ஊதி ஊதித் தின்னலாம் என்கிறது அமெரிக்கா. ஆகா; அமெரிக்காவின் தயாள குணமே அலாதியானது என்று மெச்சிப் புகழ்கிறது மன்மோகன் சிங் கும்பல்.

வெறும் விவசாய ஆராய்ச்சிக் கல்வி மட்டுமல்ல; கல்வி, பல்கலைக் கழகப் பாடத்திட்டம், அறிவுசார் சொத்துரிமை; உயிரியல் பாதுகாப்பு, உணவுப் பாதுகாப்பு, உணவு பதப்படுத்தல், அறுவடைக்குப் பிந்திய நிர்வாகம், உணவுச் சந்தை, மண்வள நிர்வாகம், மனிதவள நிர்வாகம் - என அனைத்தையும் கட்டுப்படுத்தி, நாட்டின் ஒட்டுமொத்த விவசாயத்தின் மீதும் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்த இந்தப் 'பசுமைப் புரட்சி'த் திட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வால்மார்ட் என்பது உலகெங்கும் பல நாடுகளின் சில்லறை வணிகத்தைத் தனது இரும்புப் பிடியில் வைத்திருக்கும் மிகப்பெரிய அமெரிக்கப் பகாசுர கம்பெனி. மான்சாண்டோ என்பது உலகின் மிகப் பெரிய விதை-பூச்சி மருந்துக் கம்பெனி. பி.டி.காட்டன் எனும் மரபீணி மாற்றம் செய்யப்பட்ட பருத்தி மூலம் உலகெங்கும் விவசாயிகளின் எதிர்ப்பைச் சம்பாதித்துள்ள நச்சு விதைக் கம்பெனி. இவ்விரு அமெரிக்கப் பன்னாட்டுக் கம்பெனிகள்தான் இந்த நிரந்தரப் பசுமைப் புரட்சித் திட்டத்தின் தலைமைப் பொறுப்பில் உள்ளன. இந்திய விவசாயத்திலும் விவசாயச் சந்தையிலும் ஆதிக்கம் செலுத்தும் வலுவான இடத்திற்கு இவ்விரு அமெரிக்க நிறுவனங்களும் அதிகாரபூர்வமாக வந்துவிட்டன. பன்னாட்டு ஏகபோகக் கம்பெனிகளின் இப் 'பசுமைப் புரட்சி'த் திட்டத்தைச் செயல்படுத்தும் தலைவராக உலக வங்கியின் கைக்கூலியும், திட்டக் கமிசனின் துணைத் தலைவருமான மான்டேக் சிங் அலுவாலியா நியமிக்கப்பட்டுள்ளார்.

'நிரந்தர பசுமைப் புரட்சி'க்கான தலைமைக் குழுவில் உள்ள இவ்விரு அமெரிக்க நிறுவனங்கள்தான், இனி இந்திய விவசாய ஆராய்ச்சிக்கான நிகழ்ச்சி நிரலைத் தீர்மானிக்கும். இந்திய விவசாய ஆராய்ச்சிக் கூடங்கள், விவசாயப் பல்கலைக்கழகங்களின் செயல்பாடுகளை வரையறுக்கும். அதாவது, விவசாயப் பல்கலைக்கழகங்களில் எதைப் படிக்க வேண்டும், எதில் ஆராய்ச்சி செய்ய வேண்டும், என்னென்ன பாடதிட்டங்கள் என்று அனைத்தையும் தீர்மானிக்கப் போகிறவர்கள் இந்தியக் கல்வியாளர்கள் அல்ல; இரண்டு அமெரிக்கப் பகாசுரக் கம்பெனிகள்!

உயிரி தொழில்நுட்பம், உயிரியல் மூலாதாரங்கள், அறிவுசார் சொத்துரிமை ஆகியவையே இப்'பசுமைப் புரட்சி'த் திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும். ஒன்றொடொன்று தொடர்புடைய இம்மூன்று துறைகளில் ஆதிக்கம் செலுத்தவும் அதன்மூலம் நாட்டின் ஒட்டுமொத்த விவசாயத்தைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரவும் அமெரிக்கா துடிக்கிறது. விவசாய உற்பத்தியானது மக்களின் உணவுக்கானதாக அல்லாமல் சந்தைக்கானதாக, இலாபத்துக்கானதாக மாற்றப்பட வேண்டும் என்பதையே இப்பசுமைப் புரட்சி மூலம் அமெரிக்கா அறிவித்துள்ளது. இந்தத் திசையில், இந்திய



படிப்பகம்

www.padippakam.com

விவசாய ஆராய்ச்சி நிறுவனங்கள் மேற்கூறிய மூன்று துறைகளில் ஆராய்ச்சி செய்வதற்காக அமெரிக்காவுடன் ஒப்பந்தம் போட்டுக் கொள்ள வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



இந்திய விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகளில் பல்லாயிரக்கணக்கான ரகங்களைக் கொண்ட அரிசி, கோதுமை மற்றும் பிற உணவு தானியங்களின் விதைகள் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. இந்திய அரிய வகை ரகங்களின் மரபணுக்களை வைத்து ஆராய்ச்சி செய்து, புதிய வீரியரக உணவு தானிய ரகங்களைக் கண்டறிந்து, அறிவுசார் சொத்துரிமையின்படி அதற்குக் காப்புரிமை பெற்று, விதை நெல்லுக்கு இந்திய விவசாயிகளைத் தன்னிடம் கையேந்த வைப்பதுதான் இந்த அமெரிக்கப் 'பசுமைப் புரட்சி'யின் சதித்திட்டம். மேலும், உலக வர்த்தகக் கழகத்தின் (WTO) உணவு மற்றும் விவசாயத்துக்கான பயிர் மூலாதார ஒப்பந்தப்படி, எந்தவொரு நாடும் நிறுவனமும் மரபணு மூலாதாரங்களைப் பரிமாறிக் கொள்ளவும் மேம்படுத்தவும் அனுமதிக்க வேண்டும். உலக வர்த்தகக் கழகத்தில் உறுப்பு நாடாக உள்ள இந்தியா இதை மீறவும் முடியாது.

மத்தியப் பிரதேச மாநிலத்திலிருந்து பிரிக்கப்பட்டு தனிமாநிலமாகியுள்ள சட்டிஸ்கார், இந்தியாவின் பாரம்பரிய நெற்களஞ்சியங்களில் ஒன்றாகும். மத்திய அரிசி ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குனராக இருந்த டாக்டர் ரிச்சாரியா மற்றும் அவரது குழுவினரின் பெருமுயற்சியால் ராய்ப்பூரிலுள்ள விதைக் கருவூலத்தில் ஏறத்தாழ 22,000 வகையான நெல் ரகங்களின் விதை நெல் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. இக்கருவூலமானது உலகின் இரண்டாவது பெரிய சேமிப்புத் திரட்டாகும். சதிகார 'பசுமைப் புரட்சி'யானது இம்மரபணுக் கருவூலத்தையே பன்னாட்டு ஏகபோக கம்பெனிகளின் காலடியில் சமர்பித்துவிட்டது.

நமது முன்னோர்களான விவசாயிகள் உருவாக்கிய அரிய வகை நெல், கோதுமை ரகங்களின் மரபணுக்களைக் களவாடி, அதைக் கொண்டு மரபணு மாற்றம் செய்யப்பட்ட புதிய ரகங்களை உருவாக்கி அவற்றுக்கும் காப்புரிமை பெற்றுவிட்டால், அதன் பிறகு மான்சாண்டோ கம்பெனியிடம் மட்டுமே விதையை வாங்க வேண்டும். இந்த விதைகள் ஒருபோகம் மட்டுமே மகசூல் தரக்கூடிய மறுமுளைப்புத் திறனற்ற மலட்டு விதைகளாகவே இருக்கும். எனவே, அடுத்த பருவத்தில் விதைக்காக மீண்டும் மான்சாண்டோவிடம்தான் கையேந்த வேண்டும். விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகள் வால்மார்ட் - மான்சாண்டோவின் கட்டுப்பாட்டில் வந்துவிடுவதால், விதைகளிலிருந்து மொத்த விவசாயத்தையும் வர்த்தக மேலாதிக்கத்தையும் அவை நிலைநாட்டிக் கொண்டுவிடும்.

'இரண்டாவது பசுமைப் புரட்சி' என்பது வெறுமனே விவசாய விவகாரமல்ல; நாட்டின் அரசியல் - சமூக - பொருளாதாரம், உயிரியல் பன்முகத்தன்மை, உணவுப் பாதுகாப்பு, மரபணுச் செல்வம் உள்ளிட்ட அனைத்தையும் கட்டுப்படுத்தி ஆதிக்கம் செய்யும் அமெரிக்க காலனியாதிக்கத்தின் ஓர் அங்கம். எனவேதான், நாட்டுக்கோ மக்களுக்கோ தெரியாமல் மிகவும் ரகசியமாக சதித்தனமான முறையில் இது உருவாக்கப்பட்டுள்ளது. தேசிய விவசாய அறிவியல் கழகம், இந்திய அறிவியல் கழகம், விவசாய அமைச்சகம், பிரபல விஞ்ஞானிகள், அரசுத் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநில அரசுகள் என யாருக்குமே தெரிவிக்கப்படாமல், விவாதிக்கப்படாமல் இம்மறுகாலனிய சதித்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. வேட்டுச் சத்தம் ஏதுமின்றி ஆக்கிரமிப்புப் போர் தொடங்கிவிட்டது.

> **'இரண்டாவது பசுமைப் புரட்சி' என்பது வெறுமனே விவசாய விவகாரமல்ல; நாட்டின் அரசியல் - சமூக - பொருளாதாரம், உயிரியல் பன்முகத்தன்மை, உணவுப் பாதுகாப்பு, மரபணுச் செல்வம் உள்ளிட்ட அனைத்தையும் கட்டுப்படுத்தி ஆதிக்கம் செய்யும் அமெரிக்க காலனியாதிக்கத்தின் ஓர் அங்கம்.**

•••

நெல்லும் கரும்பும் கடலையும் பயிரிட்டு வந்த விவசாயிகள், இனி கள்ளியும் கற்றாழையும் காட்டாமணக்கும் பயிரிட்டு அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டியதுதானா? அரிசிக்கும் கோதுமைக்கும் இனி அமெரிக்காவிடம் கையேந்தி நிற்க வேண்டியதுதானா? பல கோடி டன் உணவு தானியங்களைக் கையிருப்பாக சேமிப்பில் வைத்துள்ள இந்திய உணவுக் கழகம் இனி என்னவாகும்? - கேள்விகள் என் நெஞ்சைத் துளைத்தன.

அன்று வெள்ளைக்காரனின் காலனியாதிக்கத்தின்போது, நெல்லுக்குப் பதிலாக அவுரிச் செடியை - நீலச்சாயச் செடியைக் கட்டாயமாகப் பயிரிடுமாறு விவசாயிகள் வதைக்கப்பட்ட வரலாறு என் நெஞ்சில் நிழலாடியது. இன்று அமெரிக்கா தலைமையிலான மறுகாலனியாதிக்கத்தின்கீழ், இந்திய பாரம்பரிய விவசாயமும் விவசாயிகளும் நாசமாக்கப்படும் பயங்கரத்தை அறிந்து அதிர்ச்சியடைந்தேன். நெல் விளைந்த பூமியில் இன்று கற்றாழை செழித்தோங்கி நிற்பதைப்போல, மாவீரன் பகத்சிங் பிறந்த பஞ்சாப் மண்ணிலிருந்து மன்மோகன் சிங், மாண்டேக் சிங் அலுவாலியா எனும் இரு ஏகாதிபத்திய கைக்கூலிகள் கிளம்பியிருப்பதை எண்ணும்போது எனக்குக் கோபம் கொப்பளித்தது. அன்று நம் முன்னோர்களான விவசாயிகள் அவுரிச் செடி பயிரிட மறுத்து, காலனியாதிக்கத்திற்கு எதிராகப் போராடிய வீர வரலாறு என் நெஞ்சில் விடியலின் கீதமாய் எதிரொலித்தது. அமெரிக்க மேலாதிக்கவாதிகளின் இரண்டாவது பசுமைப் புரட்சி அல்ல; காலனியாதிக்கத்தை வீழ்த்தும் சிவப்புப் புரட்சிதான் இன்று நாட்டுக்கும் விவசாயிகளுக்கும் உடனடித் தேவை என்ற உணர்வே என் சிந்தனையை ஆக்கிரமித்தது.

• மனோகரன்



படிப்பகம்

www.padippakam.com

## *கேரளா:*

# நாற்காலி பிடிக்குமுன்னே நாய்ச்சண்டை

**"து**ரோகி விஜயன் ஒழிக! காட்டிக் கொடுக்கும் நவீன 'யூதாஸ்' விஜயன் ஒழிக! 'பூர்ஷ்வா' விஜயன் ஒழிக!'' - என்று முழங்கிக் கொண்டே பேரணிகளும் ஆர்ப்பாட்டங்களும் கடந்த மார்ச் மூன்றாவது வாரத்தில் கேரள மாநிலத்தில் ஆங்காங்கே வெடித்துக் கிளம்பின. கேரள மாநில சி.பி.எம். செயலாளரான பினாரயி விஜயனின் கொடும்பாவிகள் கொளுத்தப்பட்டன.

இவற்றைச் செய்தவர்கள் சி.பி.எம். கட்சியின் எதிரிகள் அல்ல; சி.பி.எம். கட்சி ஊழியர்கள்தான் தமது கட்சிச் செயலாளருக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தினர். கேரள சி.பி.எம். கட்சி செயலாளர் பினாரயி விஜயன் கோஷ்டிக்கும், அரசியல் தலைமைக் குழு உறுப்பினரும் மூத்த தலைவருமான வி.எஸ். அச்சுதானந்தன் கோஷ்டிக்குமிடையே நாற்காலி பதவிக்காக நடக்கும் நாய்ச்சண்டையானது தீப்பந்த ஊர்வலம், திருவனந்தபுரத்திலுள்ள சி.பி.எம். கட்சித் தலைமை அலுவலகமான ஏ.கே.ஜி. பவன் முன்பு முற்றுகைப் போராட்டம் என பகிரங்க தெருச் சண்டையாக முற்றி மாநிலமெங்கும் சந்தி சிரித்தது.

கேரளத்தில் ஒவ்வொரு தேர்தலிலும் ஆளுங்கட்சி வீழ்த்தப்பட்டு, எதிர்க்கட்சி ஆட்சிக்கு வருவது வாடிக்கையாக உள்ளது. இதன்படி, தற்போது ஆளுங்கட்சியாக உள்ள காங்கிரசு வீழ்த்தப்பட்டு, சி.பி.எம். தலைமையிலான இடதுசாரி ஜனநாயக முன்னணி, நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைக்கும் என்ற எதிர்பார்ப்பு அக்கட்சி அணிகளிடம் நிலவியது. கேரளத்தில் முன்னாள் சி.பி.எம். முதல்வர் ஈ.கே. நாயனாரின் மறைவுக்குப் பிறகு, முதல்வர் பதவிக்கான வேட்பாளர் தகுதி மூத்த தலைவரான வி.எஸ். அச்சுதானந்தனுக்குக் கிடைக்கும் என்றும் கேரளத்தின் சி.பி.எம். நிறுவனத் தலைவர்களில் ஒருவர், கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர், ஊழல் கறைபடியாதவர், கீழ்மட்டத் தொண்டர்களின் ஆதரவைப் பெற்றவர். எளிமையானவர், மூத்த தோழர் என்றெல்லாம் சித்தரிக்கப்படும் அச்சுதானந்தன் அடுத்த முதல்வராக இத்தேர்தலில் போட்டியிடுவார் என்றும் ஊகமும் நம்பிக்கையும் நிலவியது.

ஆனால், சி.பி.எம். கட்சியின் வேட்பாளர் பட்டியலில் அச்சுதானந்தன் பெயரே இல்லை. இதனால் ஆத்திரமடைந்த அவரது விசுவாசிகளும் அபிமானிகளும் கட்சித் தலைமைக்கு எதிராக, குறிப்பாக கட்சியின் மாநிலச் செயலாளர் பினாரயி விஜயனுக்கு எதிராக பகிரங்கமாக போராட்டங்களை நடத்தினர். விஜயன் ஆதரவாளர்களுக்கும் அச்சுதானந்தன் ஆதரவாளர்களுக்குமிடையே கைகலப்பு நடக்குமளவுக்கு இந்த கோஷ்டி சண்டை கேரள மாநிலமெங்கும் நாறியது.

சி.பி.எம். கட்சியின் கேரள மாநிலக் குழு, கட்சி செயலாளர் பினாரயி விஜயனின் இறுக்கமான பிடியில் உள்ளது. இதர ஓட்டுக் கட்சிகளைப் போல, சி.பி.எம். கட்சியை பெருந்தொழில் நிறுவனம் போல மாற்றியமைத்ததில் முக்கிய பங்காற்றியவர்தான் விஜயன். ஏறத்தாழ ரூ. 4000 டேி சொத்து மதிப்புடைய சி.பி.எம். கம்பெனியின் தலைமை ''பாஸ்'' ஆக உள்ள விஜயன், தானே ஒரு அதிகாரபீடமாகி தனக்கென ஒரு விசுவாச கோஷ்டியை உருவாக்கி நிலைநாட்டியுள்ளார்.

''கைரளி டி.வி.'', ரப்கோ கூட்டுறவு கழகம், மலபார் மனமகிழ்ச்சி கிளப், மறைந்த கட்சித் தலைவர்களின் பெயரால் தனியார் மருத்துவமனைகள், தகவல்-தொழில்நுட்ப மையங்கள் எனப் பல நிறுவனங்களை கட்சி மூலம் நடத்தி கோடீஸ்வர கட்சியாக சி.பி.எம்.-ஐ மாற்றியமைத்தவர்தான் முதலாளித்துவ 'காம்ரேடு' விஜயன். அவர் முந்தைய ஈ.கே. நாயனார் ஆட்சியில் மின்துறை அமைச்சராக இருந்த போது, கனடா நாட்டு நிறுவனத்துடன் முறைகேடாக போட்ட ஒப்பந்தம் - அதனால் மாநில அரசுக்குக் கோடிக் கணக்கில் ஏற்பட்ட இழப்பும் பற்றி மையப் புலனாய்வுத்துறை விசாரணை நடத்தி வருகிறது. தேர்தல் நேரத்தில் விசாரணை அறிக்கை வெளியானால், சி.பி.எம்.-க்கும் பினாரயி விஜயனுக்கும் பின்னடைவு ஏற்படும் என்பதால், அவர் தேர்தலில் போட்டியிட வேண்டாம் என கட்சி தீர்மானித்தது. இதனால், அச்சுதானந்தனே முதல்வர் பதவிக்கான வேட்பாளராக நிறுத்தப்படுவார் என்ற எதிர்பார்ப்பு அக்கட்சி அணிகளிடம் நிலவியது. ஆனால், செயலாளர் விஜயனோ, தனக்கு முதல்வர் பதவி கிடைக்க வாய்ப்பில்லாத நிலையில், அச்சுதானந்தனுக்கு ஆப்பு வைத்து வேட்பாளர் பட்டியலில் அவர் பெயரே இல்லாமல் செய்துவிட்டார்.

நம்ம ஊரு நல்லகண்ணுவைப் போல கேரள போலி கம்யூனிஸ்டு தலைவரான அச்சுதானந்தன், எளிமையான - மூத்த தலைவராக இருக்கிறார்; பினாரயி விஜயன் புதிய தலை

தொடர்ச்சி 21-ஆம் பக்கம்

**அச்சுதானந்தனுக்கு ஆதரவாக, பினாரயி விஜயனின் கொடும்பாவியை எரித்து, இந்திய மாணவர் சங்கத்தினர் திருச்சூரில் நடத்திய போராட்டம்.**





படிப்பகம்

www.padippakam.com

# நிகரில்லா பல்கலைக் கிரிமினல் கழகங்கள்

## – தொடரும் மாணவர் போராட்டம்!

**கை**க்குட்டையால் முகத்தை மறைத்துக் கொண்டு பத்திரிகைகள் - தொலைக்காட்சிகளுக்குப் பேட்டிய ளிக்கும் 'தீவிரவாதி'களைப் பார்த்தி ருக்கிறோம். அவர்களைப் போல, அடையாளம் தெரியாதபடி தமது முகத்தை கைக்குட்டையால் மறைத்துக் கொண்டு, போராடும் சத்தியபாமா நிகர்நிலைப் பல்கலைக்கழக மாணவர் கள் பேட்டியளிப்பதைக் கண்டு தமிழ கமே அதிர்ச்சியடைந்தது.

''கல்லூரி நிர்வாகம் 'பறக்கும் படை' என்ற பெயரில் ஒரு குண்டர் படையை வைத்திருக்கிறது. அவர்கள் மாணவர்களைக் கண்காணிப்பார்கள். போராட்டத்தில் ஈடுபடுவோரைக் கண் டுபிடித்து 'டார்க் ரூம்' எனப்படும் கொட்டடியில் அடைத்து வைத்து ஆபாச வசவுகளுடன் காட்டுமிராண் டித்தனமாக அடிப்பார்கள். போராடிய குற்றத்திற்காக இதுவரை 80 மாணவர் களை நிர்வாகம் 'சஸ்பெண்ட்' செய் துள்ளது. இத்தகைய பழிவாங்கலிலி ருந்து தப்பிக்கவும் போராட்டத்தைத் தொடரவும் நாங்கள் எங்களை அடை யாளப்படுத்திக் கொள்ளாமல் இருக்கி றோம்'' என்று பேட்டியளித்தார்கள், போராடும் மாணவர்கள். தனியார் சுய நிதிக் கல்லூரிகள் - நிகர்நிலைப் பல் கலைக் கழகங்களின் மோசடி-பகற் கொள்ளையையும் கிரிமினல் கொட் டங்களையும் மீண்டுமொருமுறை நிரூ பித்துக் காட்டிவிட்டது, கடந்த இரு மாதங்களாகத் தொடரும் மாணவர் போராட்டம்.

நாடு முழுவதும் பொறியியல் கல் வியை முறைப்படுத்த ஏற்படுத்தப் பட்ட அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சில் (ஏஐசிடிஇ), கடந்த பிப்ரவரியில் தனியார் நிகர்நிலைப் பல் கலைக் கழகங்களுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பியது. இக்கவுன்சிலின் அனும தியின்றி பொறியியல் கல்வி வகுப்புக ளைத் தொடங்கக் கூடாது; பொறியி யல் பாடப் பிரிவுகளுக்கு கட்டாயம் கவுன்சிலின் அங்கீகாரம் பெறவேண் டும் என்பதுதான் அந்த அறிக்கையின் சாரம். அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தரும் கவுன்சிலின் (ஏஐசிடிஇ) அங்கீகாரம் பெறாமல் நிகர்நிலைப் பல்கலைக் கழகங்கள் நடத்தும் படிப்புகள் செல்லாது என் றார். கவுன்சிலின் அறிவிப்பை எதிர்த்து நிகர்நிலைப் பல்கலைக் கழக முதலாளிகள் சென்னை உயர்நீதி மன் றத்தில் வழக்குகளைத் தொடுத்தனர்.

இதற்கிடையே தங்களது எதிர்கா லமே கேள்விக்குறியாகிவிட்ட அச்சத் தில், இத்தனியார் நிகர்நிலைப் பல்க லைக்கழக மாணவர்கள் நிர்வாகத்தி டம் விளக்கம் கேட்டபோது, மழுப்ப லான திமிர்த்தனமான பதில்தான் கிடைத்தது. ''நாங்கள் கொடுக்கும் சான் றிதழே போதுமானது. தொழில்நுட்பக் கவுன்சிலிடம் அங்கீகாரம் பெறத் தேவையே இல்லை. வீண் வதந்தியால் உங்கள் எதிர்காலத்தைப் பாழடித்துக் கொள்ளாதீர்கள்'' என்று உபதேசம் செய்து நிர்வாகம் எச்சரித்தது. ஆனால், அண்மையில் சென்னையில் நடந்த வேலைவாய்ப்பு கண்காட்சியில் பங் கேற்ற பன்னாட்டு-உள்நாட்டு தொழில் நிறுவனங்கள், அகில இந்திய தொழில் நுட்ப கல்விக் கவுன்சிலின் அங்கீகாரம் பெறாத கல்வி நிறுவனங்கள் அளிக் கும் சான்றிதழ்கள் தரமற்றவை என்று நிராகரித்துள்ளன. இதனைத் தொடர்ந்து ஹெச்.சி.எல். நிறுவனமும் இத்தகைய தரமற்ற சான்றிதழ்களைக் கொண்டு வேலைக்கு அமர்த்தப்பட்ட தனது ஊழியர்களை வெளியேற்றி யுள்ளது. அகில இந்திய தொழில் நுட்பக் கல்விக் கவுன்சிலும் தன்னிடம் அங்கீகாரம் பெற்ற கல்லூரிகள் எவை யெவை என்பதை இணையதளத்தின் மூலம் பகிரங்கமாக வெளியிட்டது.

இவற்றையெல்லாம் சுட்டிக் காட்டி தனியார் நிகர்நிலை பல்கலைக்கழக மாணவர்கள் மீண்டும் நிர்வாகத்திடம் கேள்வி எழுப்பியும் முறையான விளக் கம் தரப்படாததால், லட்ச லட்சமாகக் கொட்டிக் கொடுத்து படிக்கும் மாண வர்கள் தமது எதிர்காலமே கேள்விக் குறியாகிவிட்ட பீதியில், வேறு வழி யின்றி போராட்டத்தில் குதித்தனர். எஸ்.ஆர்.எம். கல்லூரியில் தொடங் கிய போராட்டம், ஜேப்பியாரின் சத்தி யபாமா, எம்.ஜி.ஆர். பாரத் முதலான பல்கலைக் கழகங்களிலும், ஏன், காஞ்சி மட சங்கராச்சாரியின் சந்திர சேகரரேந்திர விசுவமகா வித்தியால யாவிலும் காட்டுத் தீயாகப் பற்றிப் படர்ந்தது. வகுப்புகளைப் புறக் கணித்து ஆர்ப்பாட்டங்கள், உண்ணா விரதங்கள் என போராட்டங்கள் தொடர்ந்தன. பீதியடைந்த இப்பல் கலைக் கழகங்களின் முதலாளிகள், குண்டர்களை வைத்து போராடும் மாணவர்களை அடித்து நொறுக்கினர்.

கல்வி வியாபாரி ஜேப்பியாரின் ரவுடித்தனத்தை எதிர்த்து அடையாளம் தெரியாதபடி முகத்தை மூடிக் கொண்டு போராடும் மாணவர்கள்.





படிப்பகம்

www.padippakam.com




**ராபின்வாஸ் என்ற மாணவரைத் தற்கொலைக்குத் தூண்டிய ஜேப்பியாரைக் கைது செய்யக் கோரி, பு.மா.இ.மு., திருவாரூரில் நடத்திய ஆர்ப்பாட்டம்**

மாணவர்களை பகிரங்கமாக மிரட்டுவது, சான்றிதழ் தரமாட்டோம் என்று அச்சுறுத்துவது, போராடும் முன்னணியாளர்களைக் கண்டுபிடித்து இடைநீக்கம் செய்வது, போலீசை ஏவி கைது செய்து பொய் வழக்கு சோடிப்பது, குண்டர்களை வைத்து கல்லூரியைச் சேதப்படுத்திவிட்டு பழியை மாணவர்கள் மீது போடுவது என்பதாக கல்வி வியாபாரிகளின் அட்டகாசம் தலைவிரித்தாடியது. மாணவர் போராட்டத்தைத் தொடர்ந்து இந்நிகர்நிலைப் பல்கலைக் கழகங்கள் காலவரையற்று மூடப்பட்டன.

ஜேப்பியாரின் சத்தியபாமா பல்கலைக் கழகத்தில் பொறியியல் கல்வி பயின்று வந்த ராபின்வாஸ் என்ற மாணவர் போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக, ''உன் தந்தையிடம் சொல்லி சீட்டைக் கிழித்து வீட்டுக்கு அனுப்பி விடுவேன்'' என்று முன்னாள் சாராய வியாபாரியும் இந்நாள் கல்வித் 'தந்தை'யுமான ஜேப்பியார் மிரட்டியுள்ளார். அதனால் மனமுடைந்த ராபின்வாஸ் மார்ச் 3-ஆம் நாளன்று தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். ஆனாலும் ராபின்வாஸை தற்கொலைக்குத் தள்ளிய கொலைக் குற்றவாளி ஜேப்பியார் இன்றுவரை கைது செய்யப்படவில்லை.

''தனியார் மோசடி நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களின் அங்கீகாரத்தை ரத்து செய்! ஜேப்பியாரை கொலைக் குற்றத்தின் கீழ் சிறையிலடை!'' என்ற முழக்கங்களுடன் மாணவர்கள் போராட்டத்தைத் தொடர்ந்தனர். எஸ்.ஆர்.எம். கல்லூரி மாணவர்களது பெற்றோர்கள் மார்ச் 2-ஆம் நாளன்று பத்திரிகையாளர்களைச் சந்தித்து தங்கள் பிள்ளைகளை கல்லூரி நிர்வாகம் அடியாட்களை வைத்து தாக்குவதாகவும் மிரட்டுவதாகவும் கண்ணீர் மல்க பேட்டியளித்தனர். நெல்லை பி.எஸ்.என். கல்லூரி மாணவர்கள், நிர்வாகம் தங்களிடம் பல லட்சம் நன்கொடை பிடுங்கி மோசடி செய்ததையும் குண்டர்களை வைத்து தாக்கியதால் ஏற்பட்ட காயங்களையும் காட்டியும் அண்ணா பல்கலைக் கழக துணைவேந்தரிடம் புகார் கொடுத்தனர். இப்பல்கலைக் கழகங்கள், வரும் கல்வியாண்டில் மாணவர்களைச் சேர்க்க தடை விதிக்கக் கோரி பொது நலவழக்குகள் தொடரப்பட்டன. அரசாங்கம் தலையிட்டு இப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று கோரிக்கைகள் எழுந்தன. மீண்டும் கல்லூரி திறக்கப்பட்டதும் குண்டர்களின் தாக்குதலை முறியடித்து மாணவர்கள் தொடர்ந்து போராடினர்.

**தனியார்-அந்நிய தொழில் முதலாளிகளும், தனியார் கல்வி முதலாளிகளும் சட்டங்களை மதிப்பதில்லை. பகற்கொள்ளையையும் கொத்தடிமைத்தனத்தையும் அடக்குமுறையையும் நிறுத்துவதில்லை. நீதிமன்றமோ அரசாங்கமோ தலையிட்டு தடுத்து நிறுத்துவதுமில்லை. இதுதான் தனியார்மயத்தின் மகிமை!**

ஆனால், தனியார் கல்விக் கொள்ளையர்களுடன் கைகோர்த்துக் கொண்டுள்ள உச்சநீதி மன்றம், அரசாங்கம் இத்தனியார் கல்லூரி நிர்வாகச் செயல்பாடுகளில் தலையிடக் கூடாது என்று கடந்த ஆகஸ்டில் தீர்ப்பளித்துள்ளது. தமிழகத்தில் பொறியியல் கல்லூரி மாணவர் சேர்க்கையை மேற்பார்வையிட நிறுவப்பட்ட சுப்பிரமணியன் கமிட்டியும், கல்விக் கட்டணங்களைப் பரிசீலிக்க நிறுவப்பட்ட இராமன் கமிட்டியும் உச்சநீதி மன்றத் தீர்ப்புக்குப் பிறகு முடமாகிவிட்டன.

தனியார் தொழில்நுட்பக் கல்லூரிகளில் மாணவர்களை எந்த அடிப்படையில் சேர்ப்பது, எந்தத் தேர்வு முறையைப் பின்பற்றுவது, எவ்வளவு கட்டணம் வசூலிப்பது, எந்த அடிப்படையில் இடஒதுக்கீடு செய்வது என்பதற்கு எந்த வரையறையும் கிடையாது. தனியார் கல்வி முதலாளிகள் இட்டதுதான் சட்டம்; வைத்ததுதான் திட்டம் என்கிற தனிகாட்டு தர்பார்தான் நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களில் நடக்கிறது. தொழில்நுட்ப கவுன்சிலின் அங்கீகாரத்தைப் பெற ஏன் இந்த பல்கலைக் கழகங்கள் தயங்குகின்றன, ஏன் நீதிமன்றங்களுக்குப் படையெடுக்கின்றன என்ற கேள்வியே அவற்றின் மோசடியையும் கொள்ளையையும் நிரூபித்துக் காட்டுகின்றன.

எஸ்.ஆர்.எம்; ஜேப்பியாரின் சத்தியபாமா நிகர்நிலைப் பல்கலைக் கழகம் முதலானவை விதிவிலக்கானவை என்று சிலர் கருதலாம். விதிவிலக்காக இருந்தாலும் இதற்கு சட்டப்படி தீர்வு கண்டு நிவாரணம் வழங்கும் இடம் எது? இந்தக் கேள்வி ஜேப்பியார் கல்லூரிக்கு

தொடர்ச்சி 26-ஆம் பக்கம்



படிப்பகம்

## இந்திய - அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம்:

# அடிமைக்கு எதற்கு அணு ஆயுதம்?

''ஜார்ஜ் புஷ்ஷை அமெரிக்காவின் மகாராஜாவாகவே கருதி உபசரித்தது இந்தியா'' என்று புஷ்ஷின் இந்திய வருகையைப் பற்றி எழுதியது ''நியூயார்க் டைம்ஸ்'' நாளேடு. புஷ் மகாராஜா என்றால் குறுநில மன்னன் அல்லது பாளையக்காரன் யார்? அது மன்மோகன் சிங் தான் என்பதை விளக்கத் தேவையில்லை. முன்னாள் உலக வங்கி அதிகாரியான மன்மோகன் சிங், தன்னுடைய எசமானிடம் கூனிக் குறுகிக் குழைந்து கும்பிடு போட்டுப் பல்லிளித்த காட்சியை நாடே தொலைக்காட்சியில் பார்த்தது. சும்மா ஒரு தோரணைக்காகக் கூட 'தான் ஒரு நாட்டின் பிரதமர்' என்பதைக் காட்டிக் கொள்ளாமல், மிகவும் இயல்பாக, ஒரு டவாலியைப் போல நடந்து கொண்டார் மன்மோகன். இந்தியாவும் இனி அமெரிக்க வல்லரசின் டவாலிதான் என்ற உண்மையை புஷ் வருகையின் போது கையெழுத்திடப்பட்ட அணுஆயுத ஒப்பந்தம் தெளிவாக நிரூபிக்கிறது.

ஆனால், இந்தியா ஒரு அணு ஆயுத வல்லரசு என்பதை ஒப்புக் கொண்டு, கையெழுத்து போட வேண்டிய நிலைமை புஷ்ஷுக்கு ஏற்பட்டு விட்டதைப் போலவும், இந்தியா வல்லரசாகி வருகிறது என்ற உண்மைக்கு இது இன்னொரு சான்று என்பதாகவும் பிரச்சாரம் செய்கிறது காங்கிரசு அரசு. ஊடகங்களும் இந்தப் பொய்யை வழிமொழிகின்றன. எடுத்துக்காட்டாக, இவ்வொப்பந்தம் தொடர்பாக ''தினமணி'' நாளேடு வெளியிட்டுள்ள செய்திகள் மற்றும் தலையங்கத்தின் சாரம் பின்வருமாறு அமைந்துள்ளது.

''இந்தியா ஒரு அணு வல்லரசு என்பதை அமெரிக்கா ஏற்றுக் கொண்டு விட்டது. அணு உலைகளில் சிவில் பயன்பாட்டுக்கானவை எவை, இராணுவப் பயன்பாட்டுக்கானவை எவை யென்பதை இந்தியாதான் தீர்மானிக்கும். 14 சிவில் பயன்பாட்டு உலைகளை சோதனைக்குத் திறந்து விட்டிருப்பதால், இனி அணுசக்தி உற்பத்திக்குத் தேவையான யுரேனியத்தை அமெரிக்கா இந்தியாவுக்கு வழங்கியாக வேண்டும். தனது சொந்த தொழில்நுட்பத்தின் மூலம் இந்தியா உருவாக்கியிருக்கும் அதிவேக ஈனுலைகள் சோதனைக்குத் திறந்து விடப்பட மாட்டாது. இந்தியா அணுகுண்டு தயாரிக்க எந்தத் தடையும் இல்லை. அணு உலைகளை இனி இறக்குமதி செய்ய முடியுமென்பதால், இந்தியாவின் மின் உற்பத்தி பன்மடங்கு பெருகும்.''

இந்தக் கூற்றுகள் அனைத்துமே பொய் என்பதையும் ஒப்பந்தத்தின் உண்மையான பின்னணியையும் சுருக்கமாகக் காண்போம்.

இந்தியாவின் மின்சக்தித் தேவையை ஈடு செய்வதற்காக இந்திய அரசால் முன்மொழியப்பட்டதல்ல இந்த ஒப்பந்தம். ஈரானிடமிருந்து குழாய் மூலம் எரிவாயு பெறும் ஒப்பந்தத்தை இந்தியா கைவிட வேண்டுமென்றும், அதற்கு மாற்றாக அமெரிக்காவுடன் அணுசக்தி ஒப்பந்தம் செய்து கொள்ளலாமென்றும், மார்ச் 2005-இல் இந்தியா வந்திருந்த அமெரிக்க வெளியுறவுத் துறை செயலர் கன்டலிசா ரைஸ் போட்ட உத்திரவின் விளைவுதான் மன்மோகன் அரசின் இந்த 'அணுசக்திக் காதல்'.

ஈரான் - பாகிஸ்தான் - இந்தியா - ரசியா - சீனா - மத்திய ஆசிய நாடுகளில் தொடங்கி தென்கிழக்கு ஆசியா வரையிலான அனைத்து நாடுகளும் எரிவாயுக் குழாய்களால் இணைக்கப்பட்டால் ஆசியா ஒரு சுயேச்சையான எரிவாயுச் சந்தையாக மாறும். எண்ணெய் - எரிவாயுச் சந்தையில் அமெரிக்க மேலாதிக்கம் ஆட்டம் காணும். எரிவாயுக் குழாய் இணைப்பின் மூலம் தவிர்க்கவியலாமல் ஏற்படும் அரசியல் ஒருங்கிணைவு, அமெரிக்காவின் ஆசிய மேலாதிக்கத் திட்டத்திற்குத் தடையாக அமையும். ஈரானை ஆக்கிரமிக்கும் அமெரிக்க திட்டத்துக்கும் அது தடையை ஏற்படுத்தும் — என்பன போன்ற காரணங்களால்தான் இந்த ஒப்பந்தத்தைத் திணிக்கிறது புஷ் அரசு.

பெரும் முதலீட்டைக் கோருபவையும், அபாயங்கள் நிறைந்தவையுமான அணு மின் நிலையங்களை அமெரிக்க முதலாளிகளால் கடந்த 15 ஆண்டு காலமாக யாருக்கும் விற்க முடியவில்லை. அவற்றை இந்தியாவின் தலையில் கட்டுவதன் மூலம் கொள்ளை லாபமடிக்க இருக்கிறார்கள் அமெரிக்க முதலாளிகள்.

விலை போகாத சரக்கை தலையில் கட்டும் வியாபாரிகள் வாடிக்கையாளர்களுக்கு சலுகை வழங்குவதுதான் வழக்கம். அமெரிக்காவோ அடுக்கடுக்காக நிபந்தனை விதிக்கிறது. யுரேனியத்தின் கழிவு, அணுகுண்டு செய்யப் பயன்படும் என்பதால் எல்லா அணு மின் நிலையங்களையும் சர்வதேச அணுசக்தி ஏஜென்சியின் சோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்கிறது புஷ் அரசு.

உலகைப் பல நூறு முறை அழிப்பதற்குப் போதுமான அளவிற்கு அணு குண்டுகளைத் தயாரித்து வைத்திருக்கும் அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசு நாடுகள், மற்ற நாடுகளை மேலாதிக்கம் செய்வதற்காக உருவாக்கிய 'அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தம்'

அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தானதைக் கூட்டாகச் சேர்ந்து அறிவிக்கும் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் அமெரிக்க அதிபர் ஜார்ஜ்புஷ்.



www.padippakam.com

(NPT) எனும் ஒப்பந்தத்தில் இதுநாள் வரை இந்தியா கையெழுத்திட வில்லை என்பதுடன் அதனை எதிர்த்தும் வந்தது என்பதே வரலாறு.



இந்திராவின் ஆட்சிக் காலத்தில் நடத்தப்பட்ட பொக்ரான் அணு வெடி சோதனையைத் தொடர்ந்து தாராப்பூர் அணுமின் நிலையத்துக்கான யுரேனியம் விற்பனையை அமெரிக்கா மறுத்தது. பாரதிய ஜனதா ஆட்சிக் காலத்தில் நடத்தப்பட்ட இரண்டாவது அணு வெடி சோதனையைத் தொடர்ந்து அமெரிக்காவும் மேலை நாடுகளும் விதித்த பொருளாதாரத் தடை போன்ற நடவடிக்கைகள் வாசகர்கள் அறிந்ததே.

மற்றெல்லா அரசியல் பொருளாதாரக் கொள்கைகளிலும் ஏகாதிபத்திய அடிமைகளாக நடந்து கொண்ட போதிலும், பாகிஸ்தானுக்கு எதிரான தேசிய வெறியைத் தூண்டுவதற்கும் தெற்காசியப் பகுதியில் ஒரு துணை வல்லரசாகத் தன்னை நிலைநாட்டிக் கொள்வதற்கும் இந்திய ஆளும் வர்க்கங்களுக்கு அணு ஆயுதம் தேவைப்பட்டது. இந்தியாவின் யுரேனியம் இருப்பு குறைவென்பதால் தோரியத்திலிருந்து அணுமின் சக்தி தயாரிக்கும் ஆய்வும் ஹோமி பாபாவின் காலத்திலேயே துவங்கப்பட்டது. இன்று தோரியம் ஆய்வில் இந்தியா உலகிலேயே முதல் நிலை நோக்கி முன்னேறி வருவதாகக் கூறுகிறார்கள் விஞ்ஞானிகள். நம்முடைய சொந்த யுரேனியம் இருப்புகளைக் கொண்டே 2020-க்குள் 10,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியுமென்றும், 2040-க்குள் தோரியத்தைக் கொண்டு ஆண்டுக்கு ஒரு லட்சம் மெகாவாட் மின்உற்பத்தி செய்யவியலும் என்றும் கூறுகிறது இந்திய அணு சக்தித் துறையின் அறிக்கை.

இவ்வாறு இந்திய அணுசக்தித் துறையில் ஏற்பட்ட சுயசார்பான அறிவியல் முன்னேற்றம் அனைத்தையும் ஒரு நொடியில் அமெரிக்காவுக்குக் காட்டிக் கொடுத்துவிட்டது உளவாளி மன்மோகன் சிங் அரசு. தன்னுடைய துரோகத்தை மறைக்க அடுக்கடுக்கான பொய்களைக் கூசாமல் நாடாளுமன்றத்திலேயே அவிழ்த்து விடுகிறார் மன்மோகன்சிங்.

''இந்தியாவை அணு ஆயுத வல்லரசாக அமெரிக்கா ஏற்றுக் கொண்டுவிட்டது. எனவே, அவர்களுக்கு உள்ள உரிமை அனைத்தும் நமக்கும் உண்டு'' என்பது மன்மோகன் அவிழ்த்துவிட்ட முதல் பொய். சொல்லி வாய் மூடு முன்னே அதை மறுத்தார் அமெரிக்க வெளியுறவுத்துறை இணைச்செயலர் பார்ன்ஸ். ''அணு தொழில்நுட்பத்தை வளர்த்து வரும் நாடு இந்தியா. அவ்வளவுதான். மற்றபடி, அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட மற்ற நாடுகளைப் போலத்தான் இந்தியாவும் கருதப்படும்'' என்று அமெரிக்க நாடாளுமன்றத்துக்கு விளக்கமளித்தார்.

''இந்தியாவில் உள்ள அணு உலைகளில் எவை மின்சாரத் தயாரிப்புக்கானவை - எவை ராணுவத் தேவைக்கானவை, எதை சோதனைக்குத் திறந்து விடலாம் - எதைத் திறந்து விடக்கூடாது என்பதை நாம்தான் தீர்மானிப்போம். வேறு யாரும் நமக்கு ஆணையிட முடியாது'' என்று நாடாளுமன்றத்தில் சவடால் அடித்தார் மன்மோகன். ''சிவில் - இராணுவ பிரிவினை செய்து இந்திய அரசு கொடுத்துள்ள பட்டியலை ஏற்க முடியாது'' என்று அமெரிக்க தூதர் முல்போர்டு, மன்மோகனின் முகத்திலடித்தார். மீண்டும் ஒரு பட்டியல் தயாரானது. அதையும் அமெரிக்கா நிராகரித்தது. பிறகு, மூன்றாவதாகத் தயாரிக்கப்பட்ட பட்டியலைத்தான் புஷ் ஏற்றுக் கொண்டிருக்கிறார். ஆனால், இதையும் அமெரிக்க நாடாளுமன்றம் இன்னும் ஏற்கவில்லை.

''இந்திய விஞ்ஞானிகளால் சயசார்பாக உருவாக்கப்பட்ட அதிவேக ஈனுலைகளை அமெரிக்க சோதனைக்குத் திறந்துவிடும் பேச்சுக்கே இடமில்லை'' என்று வீரம் பேசினார் மன்மோகன். ''அது பற்றி இப்போதைக்கு எதுவும் சொல்ல முடியாது'' என்று இப்போது மழுப்புகிறார்.

''14 போனாலென்ன, 8 உலைகள் நம் கைவசமிருக்கிறதே'' என்று ஜம்பமடிக்கிறது மன்மோகன் அரசு. ''அணு சக்தி ஆய்வென்பது அடிப்படையில் ஒன்றுதான். சிவில்-இராணுவப் பிரிவினைகளைத் தாண்டி இனி எல்லாவற்றிற்குள்ளும் அமெரிக்கா நுழைந்துவிடும்'' என்கிறார்கள் இந்திய விஞ்ஞானிகள். ஈராக்கில் நடந்ததும் ஈரானில் நடந்து கொண்டிருப்பதும் அதுதான்.

''14 அணு உலைகளைத் திறந்து விட்டதன் மூலம் ஆயுத உற்பத்திக்குத் தேவையான 65% டிரைடியத்தை இழந்திருக்கிறோம். சைரஸ் என்ற அணுஉலையை மூட ஒப்புக் கொண்டதன் மூலம் ஆயுத உற்பத்திக்குத் தேவையான 35% புளுட்டோனியத்தை இழந்துவிட்டோம். இராணுவ உற்பத்திக்குத் தேவையான கழிவுகளை ஒப்படைத்துவிடுவது **(Fissile material cut off Treaty)** என்ற ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டிருப்பதால் இனி அணு ஆயுதம் தயாரிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை. இந்த ஆய்வுக்கென்றே ஒதுக்கப்பட்ட 'துருவா' என்ற உலையும் போய்விட்டது. இதுகாறும் இராணுவ இரகசியமாகப் பாதுகாக்கப்பட்டு வந்த நமது அணு சக்தித் திறன் குறித்த விவரங்கள் அனைத்தும் இப்போது அமெரிக்காவின் கைக்கு மாறிவிட்டன. ஆய்வகங்கள், அணு உலைகள், தொழில்நுட்பங்கள் என்பவை மட்டுமல்ல; அணு விஞ்ஞானிகளின் பட்டியலும் இப்போது அமெரிக்காவின் கைக்குச் சென்றுவிடும். அணு ஆயுதம் தயாரிப்பதற்கான நமது உரிமையை நிரந்தரமாக அடகு வைத்தாகிவிட்டது'' என்கிறார்



படிப்பகம்

www.padippakam.com

முன்னாள் தேசியப் பாதுகாப்பு (துணை) ஆலோசகர், சதிஷ் சந்திரா.

அணு விஞ்ஞானிகள் அனைவரது எதிர்ப்பையும் மீறி இப்படியொரு அவமானகரமான துரோக ஒப்பந்தத்தில் அவசரமாகக கையெழுத்திட வேண்டிய அவசியமென்ன? ''தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் அணு உலைகளுக்கும், கட்டி முடிக்கப்படவிருக்கும் அணு உலைகளுக்கும் தேவையான யுரேனியத்தைப் பெறுவதற்கும் இந்தியாவின் அணுசக்தித் தனிமைப்படல் நிலையத்தை (Nuclear isolation) முடிவுக்குக் கொண்டுவரவும் இதைத் தவிர வேறு வழியில்லை'' என்கிறார் மன்மோகன். ''இது பொய். இந்தியாவில் கிடைக்கும் யுரேனியத்தை வெட்டி எடுப்பதற்கான நிதி ஒதுக்கீட்டை 90-களிலேயே ரத்து செய்தவர் அன்று நிதியமைச்சராக இருந்த மன்மோகன் சிங்தான். அதன் விளைவாகத் தோன்றியுள்ள தற்காலிக நெருக்கடியே இது'' என்கிறார் சதிஷ் சந்திரா.

இவ்வொப்பந்தத்தின் விளைவாக இந்திய அணு உலைகளுக்கு வற்றாத ஜீவ நதியைப் போல யுரேனியம் பாய இருப்பதாக மன்மோகன் கூறுவது மிகப் பெரிய பித்தலாட்டம். இந்த ஒப்பந்தத்தின் விளைவாக இந்திய அணு உலைகளையும், ஆய்வுகளையும் சோதனைக்குத் திறந்து விடுவதாக சர்வதேச அணுசக்தி ஏஜென்சியிடம் ஒப்புக் கொண்டிருக்கிறது இந்திய அரசு. அணு உலைகளுக்குத் தேவையான யுரேனியத்தை பெறுவதற்கு, இந்த ஏஜென்சியின் சிபாரிசுடன்தான் யுரேனியம் விற்கும் நாடுகளை இந்தியா அணுக வேண்டும். அவ்வாறு இந்த ஏஜென்சியை அணுகுவதற்கே கூட அமெரிக்காவின் ஒப்புதலை இந்தியா பெற வேண்டும் என்று கூறுகிறது தற்போதைய ஒப்பந்தம்.

அதாவது, இனி அமெரிக்காவின் ஒப்புதலின்றி எந்த நாட்டிடமிருந்தும் இந்தியா யுரேனியத்தைப் பெற இயலாது. இந்த ஒப்பந்தம் கையெழுத்தான பின் ''தாராப்பூர் அணு உலைக்கு ரசியா யுரேனியம் வழங்கக் கூடாது'' என அமெரிக்கா ஆட்சேபித்ததும், ஆஸ்திரேலியப் பிரதமர் இந்தியாவுக்கு யுரேனியம் தர மறுத்ததும் இந்த அடிப்படையில்தான். அமெரிக்காவின் அணுஆயுதப் பரவல் தடைச் சட்டத்தில் ஒரு சிறப்பு விதிவிலக்கு (Waiver) ஏற்படுத்தி இந்தியாவுக்கு யுரேனியம் வழங்குவதா என்பதை அமெரிக்க அதிபர் ஆண்டுதோறும் முடிவு செய்வது'' என்ற அடிப்படையில்தான் அமெரிக்கா இந்த ஒப்பந்தத்தைப் போட்டுள்ளது. இனி இந்தியாவின் அணு உலைகள் இயங்க வேண்டுமென்றால், ஆண்டுதோறும் அமெரிக்காவிடம் இந்தியா நன்னடத்தைச் சான்றிதழ் பெற்றாக வேண்டும். இனி அமெரிக்காவிடம் வாங்கவிருக்கும் அணு உலைகளுக்கு மட்டுமல்ல, ஏற்கெனவே சொந்தத் தொழில்நுட்பத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் உலைகளுக்கும் இதுதான் கதி.

**இந்திய அணுசக்தித் துறையில் ஏற்பட்ட சுயசார்பான அறிவியல் முன்னேற்றம் அனைத்தையும் ஒரு நொடியில் அமெரிக்காவுக்குக் காட்டிக் கொடுத்துவிட்டது உளவாளி மன்மோகன் சிங் அரசு.**

அதாவது, நிபந்தனையற்ற முறையில் தனது அணுசக்தி நிலையங்களைத் திறந்து விட சர்வதேச அணுசக்தி ஏஜென்சியிடம் இந்தியா சட்டபூர்வமாக ஒப்புக் கொண்டுள்ளது. அமெரிக்காவோ, நிபந்தனைகளுக்கு உட்பட்டு யுரேனியமும் தொழில்நுட்பமும் வழங்க இந்தியாவுக்கு வாக்குறுதி அளித்துள்ளது.

இவ்வொப்பந்தத்தைத் தொடர்ந்து 2.5 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள 35,000 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட அணு உலைகளை அமெரிக்க முதலாளிகளிடம் வாங்கப் போகிறது இந்தியா. ''எனவே, அமெரிக்காவின் அரசியல், இராணுவ நடவடிக்கைகளை இந்தியா ஏற்றுக் கொள்ளவில்லையென்றால், நம் நாட்டின் மின்சார உற்பத்தியையே சீர்குலைக்க அமெரிக்காவால் இனி முடியும்'' என்கிறார் இந்திய அணுசக்தி ஒழுங்குமுறை ஆணையத்தின் முன்னாள் தலைவர் டாக்டர். ஏ.கோபாலகிருஷ்ணன். இது கற்பனையல்ல; பொக்ரான் சோதனையைத் தொடர்ந்து அமெரிக்கா யுரேனியம் வழங்க மறுத்துவிட்டதால், ரசியா, சீனா, பிரான்சு ஆகிய நாடுகளிடமிருந்துதான் இந்தியா யுரேனியத்தை இறக்குமதி செய்து வருகிறது.

அது மட்டுமல்ல, அணுமின் உற்பத்தியில் தனியார் முதலாளிகள் அனுமதிக்கப்படும் வாய்ப்பையும் இந்த ஒப்பந்தம் வழங்குகிறது என்பதால் ரத்தன் டாடா மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார். தங்களுடைய லாபவெறிக்காக ஆலைக் கழிவுகளைக் கூட சுத்திகரிக்காமல் நீர்நிலைகளில் விடும் முதலாளிகள், அணுமின் நிலையம் நடத்த அனுமதிக்கப்பட்டால் அதன் விளைவுகள் எப்படியிருக்கும்? எண்ணிப் பார்க்கவே நெஞ்சு நடுங்குகிறது.

இந்திய அணு விஞ்ஞானிகள், பாதுகாப்புத்துறை அதிகாரிகள், வல்லுநர்கள் போன்ற அனைவரது எதிர்ப்புகளையும் மீறி நாட்டின் மீது இந்த ஒப்பந்தத்தை மன்மோகன் கும்பல் திணிக்கக் காரணமாக இருக்கும் இரகசியம் என்ன? அமெரிக்க அரசின் ஆயுதக் கட்டுப்பாட்டுத் துறை அதிகாரி ராபர்ட் ஜோசப் அமெரிக்க நாடாளுமன்றத்துக்கு அளித்த பதிலில் இதற்கான விளக்கம் இருக்கிறது. ''மேலும் பல நிபந்தனைகளை விதிப்பதைவிட, இந்த ஒப்பந்ததில் இந்தியாவைப் பிணைத்துவிட்டு, அதன்பின் இந்திய - அமெரிக்க இராணுவ உறவு முன்னேறும் போக்கில் நமக்கு வேண்டியதை நாம் சாதித்துக் கொள்ளலாம்.''

இதுதான் இரகசியம். நாடாளுமன்றத்திற்கே தெரியாமல், 2005 ஜூன் மாதம் பிரணாப் முகர்ஜி அமெரிக்காவில் கையெழுத்திட்ட பத்தாண்டுகளுக்கான இராணுவ ஒப்பந்தமும், ஜூலையில் மன்மோகன் புஷ்ஷுடன் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையும்தான் இந்த அணுசக்தி ஒப்பந்தத்தின் அடிப்படைகள். ''உலகெங்கும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக அமெரிக்கா நடத்தும் போர்களில் இந்திய இராணுவத்தையும் ஈடுபடுத்துவது, அமெரிக்காவின் கடல் வழி ஆதிக்கத்திற்கு ஏவல் செய்ய இந்தியக் கடற்படையை அனுப்புவது, பயங்கரவாத எதிர்ப்பு - பேரழிவு ஆயுத எதிர்ப்பு நடவடிக்கைகளில் கூட்டணி, உளவுத்துறைக் கூட்டுச் செயல்பாடு, அமெரிக்க இராணுவம் இந்தியாவில் பயிற்சி மேற்கொள்வது'' என விரிந்து செல்கிறது அந்த சதித் திட்டம்.

ஆசியாவுக்கான அமெரிக்க அடியாள் என்ற பதவியில நியமனம் பெற்றுவிட்டது இந்திய அரசு. ''அடிமைக்கு எதற்கய்யா அணு ஆயுதம்?'' என்பது தான் டவாலி மன்மோகன் சிங் கேட்க விரும்பும் கேள்வி.

• சூரியன்



படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் கடிதம்

● நாங்கள் பு.ஜ. இதழை பேருந்துகளில் விற்பனை செய்து கொண்டிருந்த போது, பேருந்தில் இருந்த இரு வெளிநாட்டு மாணவர்கள், ஆர்வத்தோடு எங்களிடம் விளக்கம் கேட்டனர். பு.ஜ. இதழின் அட்டைப் படத்தைக் காட்டி பயங்கரவாத புஷ் இந்தியாவிற்கு வருவதை எதிர்த்து செய்தி வெளியாகியிருப்பதையும், அபுகிரைப் சிறைக் கொடுமைகளைப் பற்றியும் அரைகுறை ஆங்கிலத்தில் விளக்கினோம். அவர்கள் பெருமகிழ்ச்சியடைந்து, தாங்களும் அமெரிக்காவில் இப்பயங்கரவாதிக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாகப் பெருமையுடன் குறிப்பிட்டு, எங்கள் பிரச்சாரத்தை வரவேற்று ஆதரித்தனர். பு.ஜ. விற்பனை மூலம் புஷ் எதிர்ப்பாளர்களைச் சந்தித்து உரையாடிய நிகழ்ச்சி, எங்களுக்குப் பேருற்சாகத்தையும் புதிய நம்பிக்கையையும் அளித்துள்ளது.

**- வளர்மதி, திருச்சி.**

● பு.ஜ. இதழின் அட்டைப் படத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களைப் போராட அறைகூவிய அறிவிப்பைக் கண்டு உத்வேகமடைந்தேன். மறுபுறம், பயங்கரவாத புஷ்ஷை எதிர்த்துப் போராட தமிழகத்தில் இளைஞர்கள் முன்வரவில்லையே என்று வெட்கமும் வேதனையும் அடைந்தேன். பல்கலைக்கழகம் எனக்களித்த இளங்கலைப் பட்டம் வெறும் காகிதம்தான். உழைக்கும் மக்கள் அளிக்கப் போகும் ''விடுதலைப் போராட்ட வீரர்'' பட்டமும், அதற்கும் மேலாக ''தியாகி'' பட்டமும் தான் எனக்குத் தேவை. ஏகாதிபத்தியங்களுக்கு எதிராகப் போராடி நாட்டை விடுவிக்கும்வரை இனி நான் ஓயமாட்டேன்.

**- பெட்ரோஸ்கி பிரான்சிஸ்,**
**திண்டிவனம்.**

● மார்ச் இதழின் அட்டைப்படம், பு.ஜ.வின் அரசியல் நேர்மைக்கும் முன்முயற்சிக்கும் துணிவுக்கும் சிறப்பானதொரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. சர்வதேசிய - தேசிய அரசியல் அரங்கில் பு.ஜ.வின் பங்கு சிறியதுதான் எனினும், அது கூர்மையான குத்தூசி போன்றுள்ளது.

**- புரட்சித்தூயன், தர்மபுரி.**

● நாட்டுப்பற்றை ஊட்டும் வகையிலும், உலக மேலாதிக்கப் பயங்கரவாதி புஷ்ஷைத் தோலுரித்துக் காட்டும் வகையிலும் அமைந்த அட்டைப்படம் சிறப்பு. ஏழை நாடுகளின் மூலவளங்களையும் பொருளாதாரத்தையும் தன் காலடியில் வீழ்த்த முயற்சிக்கும் அமெரிக்கா தலைமையிலான மறுகாலனியாதிக்கத்தை வீழ்த்த அறைகூவுவதாக அமைந்த கட்டுரை பெரிதும் பயனளித்தது. பஞ்சாப் தோழர் பாந்த்சிங்கின் போராட்ட உணர்வும் அடக்குமுறைக்கு அஞ்சாத அவரது துணிவும் மாவீரன் பகத்சிங் விதைத்த போராட்ட விதை என்ற பெருமிதமே ஏற்படுகிறது.

**- வாசகர்கள், பாடாலூர்.**

● எண்ணிலடங்கா பத்திரிகைகள் அற்பமான கிசுகிசு செய்திகளையும் ஆபாச செய்திகளையும் வெளியிட்டு, ஆட்சியாளர்களின் ஏகாதிபத்தியக் கைக்கூலித்தனத்தை மூடி மறைத்து வரும் வேளையில், நாட்டுப் பற்றாளர்களும் போராளிகளும் தேவை என்று அறைகூவிய பு.ஜ. இதழ் ஒரு புரட்சிகர அமைப்பாளன் என்பதை மீண்டும் நிரூபித்துக் காட்டியுள்ளது.

**- கரிகாலன், தஞ்சை.**

● தனது அங்கங்கள் சாதிவெறியர்களால் சிதைக்கப்பட்டாலும், எஞ்சியிருக்கும் தனது குரலால் பாடி, தீண்டாமை எதிர்ப்புத் தீ அணையாமல் போராடுவேன் என்று உறுதியாக நிற்கும் தோழர் பாந்த்சிங்கின் மனவலிமை, மக்களிடம் என்றென்றும் போராட்ட உணர்வூட்டும். தனக்கு நேர்ந்த கொடுமைகளுக்காக கழிவிரக்கம் தேடாமல், ஜனநாயக இயக்கங்களில் தன்னை இணைத்துக் கொண்டு போராடும் அவரது புர்ட்சிகர உணர்வு எனக்குப் புதிய பாதையைக் காட்டியுள்ளது.

**- ஜீவா, சென்னை.**

● நேபாள மாவோயிஸ்டுகளின் புரட்சிகர - ஜனநாயக நடைமுறையையும் ஈழ விடுதலைப் புலிகளின் பாசிச-ஜனநாயக விரோத நடைமுறையையும் ஒப்பிட்டுக் காட்டி, ஈழ விடுதலைக்கான சரியான வழியை முன்வைத்த கட்டுரை சிறியதெனினும், பெரியதொரு அனுபவத்தைக் கொடுத்தது.

**- நிர்மலா, திருச்சி.**

● மன்மோகன்சிங்கிடம் கவிழ்ந்த 'மார்க்சிஸ்டு'களது சாதனைகளில் உச்சபட்சமானது, தனது அணிகளிடம் அடிக்கும் அந்தர் பல்டிதான்! நெல்லையில், உளவாளிகளான தொண்டு நிறுவனங்களோடு கூட்டுச் சேர்ந்து நிலத்தடி நீர் பாதுகாப்புக் கூட்டுக் குழு என்ற பெயரில் கோக் எதிர்ப்பு நாடகமாடும் இக்கட்சியினர் மே.வங்கத்தில் கோக், பெப்சி ஆகிய சகலைகளுக்கு, அனுமதி கொடுத்திருப்பது பற்றி வாய் திறப்பதில்லை. மே.வங்கத்தில் ''பச்சைவயல் விமானதளம்'' எனும் தனியார் விமான தளத்தைக் கொண்டுவர முயலும் சி.பி.எம்., விமான நிலையங்களைத் தனியாருக்குத் தாரை வார்ப்பதை எதிர்ப்பதாகப் பசப்புகிறது. இத்துரோகத்தனங்களை மூடி மறைக்க இன்னும் எத்தனை பல்டிகளை அடிப்பார்கள் என்று தெரியவில்லை.

**- குருசாமி மயில்வாகனன், சிவகங்கை.**

● மறுகாலனியாதிக்க சூழலில் தமிழக ஓட்டுப் பொறுக்கிகள் நடத்தி வரும் தேர்தல் கூத்தை அம்பலப்படுத்திய பு.ஜ. இதழை விற்பனை செய்து கொண்டிருந்த போது, ''ஓட்டு கேட்டு வரும் இவனுங்கள வெளக்குமாத்தாலதான் வெளாசணும்'' என்று பெண்கள் தமது கோபத்தை வெளிப்படுத்தி, பு.ஜ. இதழை ஆர்வத்தோடு வாங்கினர். ஒரு போலீசு ஆய்வாளர், கோடிகோடியாய் சொத்து சேர்த்துள்ள விவகாரம், நாடு எத்தகையதொரு பயங்கரவாத சட்டபூர்வ கிரிமினல் கும்பலிடம் சிக்கித் தவிக்கிறது என்பதை எடுப்பாக உணர்த்தியது.

**- வாசகர்கள், திருப்பூர்.**


*இப்போது விற்பனையில்...*



**இலங்கை:**
**இயற்கைப் பேரழிவு**
**தேசத்தின் சீரழிவு**

*– பி. இரயாகரன்*

இயற்கைச் சீற்றத்தை மட்டுமல்ல; ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பையும் அதற்கு அடிபணியும் அரசியலையும் எதிர்க்க வழிகாட்டும் தொகுப்பு நூல்.

**வெளியீடு: "சமர்"**; *பிரான்சு.* **விலை: ரூ.150/–**



**இந்திய இடதுசாரிப் போக்கு**
**– ஒரு கண்ணோட்டம்**

இந்திய கம்யூனிச இயக்க வரலாற்றைச் சுருக்கமாகத் தொகுத்தளிக்கும் நூல்.

**வெளியீடு: கீழைக்காற்று விலை: ரூ. 6/–**

**நூல்கள் கிடைக்குமிடம்:**

**கீழைக்காற்று வெளியீட்டகம்,**
10, அவுலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை,
சென்னை – 600 002. ✆: 044–28412367




படிப்பகம்

www.padippakam.com

# பட்ஜெட்:
# தனியார்மயத்திற்கு கவர்ச்சி முகமூடி

இந்த ஆண்டிற்கான மைய அரசின் வரவு-செலவு அறிக்கையை, ''உண்மையான இந்தியாவிற்கான பட்ஜெட்'' எனக் குறிப்பிட்டுள்ளார், நிதியமைச்சர் ப.சிதம்பரம். தாராளமயத்தை மிகத் தீவிரமாக ஆதரித்து எழுதிவரும் ''இந்தியா-டுடே'' வார இதழுக்கு அவர் அளித்துள்ள நேர்காணலில், ''நகர்ப்புறத்தைச் சேர்ந்த ஆங்கிலம் பேசும் மேல்தட்டு நடுத்தர வர்க்கம் மட்டும் இந்தியா அல்ல... இந்த பட்ஜெட் விவசாயிகளின் பிரச்சினைகளில் அக்கறை காட்டுகிறது'' எனக் கூறியிருக்கிறார்.

விவசாயிகளுக்கு வங்கிகள் மூலம் வழங்கும் கடனை 1,75,000 கோடி ரூபாயாக அதிகரித்திருப்பது; விவசாயக் கடனுக்கான வட்டியைக் குறைத்திருப்பது; கிராமப்புற மேம்பாட்டுக்காக கடந்த பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட பாரத் நிர்மாண் திட்டத்துக்கு 54% கூடுதலாக நிதி ஒதுக்கியிருப்பது - என்ற இந்த அம்சங்களைக் காட்டித்தான், 2006-07-ஆம் ஆண்டிற்கான வரவு - செலவு அறிக்கையை, ''மக்களுக்கான பட்ஜெட்'' என ஆளும் கட்சிக் கூட்டணி போற்றுகிறது. இந்தக் கவர்ச்சித் திரையைக் கிழித்துப் பார்த்தால் தான், இது மக்களை முட்டாளாக்கும் பட்ஜெட் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

காங்கிரசு தலைமையில் அமைந்துள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி, விவசாயிகளின் தற்கொலைச் சாவுகளைக் காட்டித்தான் ஆட்சியைப் பிடித்தது. போலி கம்யூனிஸ்டுகள் தாங்கிப் பிடிக்கும் இந்த ''முற்போக்கு'' ஆட்சியிலும், விவசாயிகளின் தற்கொலைச் சாவுகள் நின்றுவிடவில்லை. குறிப்பாக, காங்கிரசு கூட்டணி ஆட்சி நடக்கும் மகாராஷ்டிராவின் விதர்பா பகுதியில் மட்டும் கடந்த ஓராண்டிற்குள் 300-க்கும் மேற்பட்ட பருத்தி விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு மாண்டு விட்டனர்.

இந்த நிலையில், பன்னாட்டு நிறுவனங்களுக்கு மிகவும் நெருக்கமான விவசாய விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் தலைமையில், விவசாயிகளின் பிரச்சினையை ஆராய குழுவொன்றை அமைத்தது, மைய அரசு. இந்தியா வெங்குமே விவசாயிகளின் வாழ்க்கையை நாசப்படுத்தி வருவது தாராளமயம்தான் என்பது கைப் புண்ணைப் போலத் தெரிந்திருந்தும், சுவாமிநாதன் குழு தாராளமயத்தை நிறுத்துமாறு பரிந்துரைக்கவில்லை. மாறாக, ''விவசாயிகளுக்குக் குறைந்த வட்டியில் வங்கிக் கடன் கொடுப்பது; பயிர் காப்பீடு திட்டத்தை நடைமுறைப்படுத்துவது; விவசாய விளைபொருட்களின் விலை சந்தையில் வீழ்ந்தால், அதனை ஈடுகட்ட நிதி ஒதுக்குவது'' எனச் சில சில்லறை சீர்திருத்தங்களைச் செய்யுமாறு அரசுக்குப் பரிந்துரைத்தது.

விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளித்திருப்பதாகக் கூறும் ப.சிதம்பரம், இந்த அற்ப சலுகைகளைக் கூட பட்ஜெட்டில் முழுமையாக அமலாக்கவில்லை. சுவாமிநாதன் குழு விவசாயிகளுக்கு 4 சதவீத வட்டிக்குக் கடன் கொடுக்க வேண்டும் எனப் பரிந்துரை செய்திருந்தது. ஆனால், ப.சிதம்பரமோ 7 சதவீத வட்டியை விவசாயிகளின் தலையில் கட்டி விட்டார்.

விவசாயிகளுக்கு வங்கிகள் மூலம் கடன் வழங்குவதற்கு, 2004-05 ஆம் ஆண்டு பட்ஜெட்டில் 1,25,309 கோடி ரூபாயும்; 2005-06 பட்ஜெட்டில் 1,41,500 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டன. இந்த ஒதுக்கீடு, கடந்த இரண்டு ஆண்டுகளில் எத்தனை விவசாயிகளைத் தற்கொலைச் சாவில் இருந்து தடுத்திருக்கிறது? எத்தனை விவசாயிகளை ஓட்டாண்டியாகி விடாமல் தடுத்திருக்கிறது?

ஏற்கெனவே வாங்கிய கடனை கட்டாமல், புதிதாகக் கடன் பெற முடியாது என்ற நிபந்தனை இருக்கும் பொழுது, ''குறைந்த வட்டிக்குக் கடன்'' என்ற ப.சிதம்பரத்தின் திட்டத்தை காகிதத்தில் எழுதி நக்கிக் கொள்ள வேண்டியதுதான் எனச் சாதாரண விவசாயிகளே அம்பலப்படுத்துகிறார்கள். பெரும்பாலான ஏழை, நடுத்தர விவசாயிகளுக்கு இந்தத் திட்டத்தால் பலன் கிடைக்காது என்றால், இந்த 1,75,000 கோடி கடன் திட்டத்தால் ஆதாயம் அடையப் போகும் விவசாயிகள் யார்?

ஏற்றுமதி பயிர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள பணக்கார விவசாயிகள்; ஒப்பந்த விவசாயத்தில் ஈடுபட்டுள்ள பெப்சி, ஐ.டி.சி. போன்ற முதலாளித்துவ நிறுவனங்கள்; விவசாய உப தொழில் என்ற பெயரில் இறால் பண்ணைகளையும் உணவு பதப்படுத்தும் தொழில்களையும் நடத்தும் முதலாளிகள்; காபி, தேயிலை தோட்ட நிறுவனங்களை நடத்தும் டாடா, இந்துஸ்தான் லீவர் போன்ற நிறுவனங்கள்; கிராமப்புறங்களில் மகளிர் சுய உதவிக் குழுக்களை நடத்தும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் - இந்தக் கும்பல்தான் விவசாயிகள் என்ற போர்வையில், இந்தத் திட்டத்தை ஏப்பம்விடக் காத்திருக்கின்றன.

கிராமப்புற மேம்பாட்டுக்காக இந்த பட்ஜெட்டில், கடந்த பட்ஜெட்டைவிட 43.2 சதவீதம் அதிகம் நிதி ஒதுக்கியிருப்பதாக ப.சிதம்பரம் தம்பட்டம் அடிப்பது ஒரு புள்ளி விவர மோசடி. குறிப்பாக, 200 மாவட்டங்களில் மட்டும் செயல்படுத்தப்படும் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு 10,170 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் இதற்காக, கடந்த பட்ஜெட்டில் 4,050 கோடி ரூபாய் செலவில் அமல்படுத்தப்பட்ட வேலைக்கு உணவு திட்டம் தற்பொழுது முற்றிலும் கைகழுவப்பட்டு விட்டது. சம்பூர்ண கிராமப்புற வேலை திட்டத்திற்கு இந்த பட்ஜெட்டில் கடந்த பட்ஜெட்டை விட 4,950 கோடி ரூபாய் குறைவாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் விவசாயம் நொடித்துப் போய், வேலையில்லாமல் விவசாயிகள் அல்லாடும் வேளையில், கிராமப்புற வேலை வாய்ப்புக்காக ஒதுக்கப்படும் மொத்த நிதியில் 9,000 கோடி ரூபாயை வெட்டியிருக்கிறார், ப.சிதம்பரம். இந்தியாவெங்கும் கிராமப்புறத்தைச் சேர்ந்த ஏழைகளும், பழங்குடியின மக்களும் அரைப்பட்டினி நிலையில் வாழ்க்கையை ஓட்டும் பொழுது, ரேசன் கடைகளின் மூலம் வழங்கப்படும் உணவுப் பொருட்களுக்குக் கொடுக்கப்படும் மானியத்தில் 2,000 கோடி ரூபாயை வெட்டியிருக்கிறார்.

அதேசமயம், புளித்த ஏப்பக்காரர்களான மேட்டுக்குடி கும்பல் வாங்கி உண்ணும் ஐஸ்கிரீம், குளிர்பானங்கள், பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்



படிப்பகம்

www.padippakam.com



கூலி குறைவாக இருந்தாலும், ஏதாவது வேலை கிடைக்குமா எனக் காத்திருக்கும் தில்லியைச் சேர்ந்த உதிரித் தொழிலாளர்கள்.

களுக்கு கலால் வரி குறைக்கப்பட்டுள்ளது.

உரத்திற்கு வழங்கப்படும் மானியம் இந்த பட்ஜெட்டில் 1,017 கோடி ரூபாயில் இருந்து 985 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளதால், இந்த ஆண்டு உரத்தின் விலை எகிறிவிடும். அதே பொழுதில், சிறிய இரக கார்களின் மீது விதிக்கப்படும் கலால் வரி பட்ஜெட்டில் குறைக்கப்பட்டிருப்பதால் மாருதி காரின் விலை 16,000 ரூபாயும்; ஹுண்டாய் காரின் விலை 23,000 ரூபாயும் குறையும்.

நெல், கோதுமை, கரும்பிற்கு அரசாங்கம் தரும் ஆதார விலையைக் கூட்டித் தர வேண்டும் என விவசாயிகள் கோருகிறார்கள். இதற்குச் சம்மதிக்காத ப.சிதம்பரம், இந்திய விவசாயிகளுக்கு கோதுமைக்குத் தரும் ஆதார விலையை விட, ஒரு டன்னுக்கு முன்னூறு ரூபாய் கூடுதலாகக் கொடுத்து, ஆஸ்திரேலியாவில் இருந்து 5 இலட்சம் டன் கோதுமையை இறக்குமதி செய்திருக்கிறார். மேலும், உணவு மானியத்தைக் குறைக்க வேண்டும் என்பதற்காகவே, இந்த ஆண்டு 40 இலட்சம் டன் கோதுமை குறைவாக கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

இந்த பட்ஜெட்டில் வெறும் 6,000 கோடி ரூபாய் அளவிற்குத்தான் புதிய வரிகள் விதிக்கப்பட்டிருப்பதாகப் பீற்றிக் கொள்கிறார், ப.சிதம்பரம். உண்மையில், நடுத்தர வர்க்கம் உள்ளிட்டு பெரும்பாலான உழைக்கும் மக்களின் மீது அளவுக்கு அதிகமான வரிச் சுமையை ஏற்றி வைத்துள்ளது இந்த பட்ஜெட். குறிப்பாக, சேவை வரியை 10 சதவீதத்தில் இருந்து 12 சதவீதமாக அதிகரித்திருப்பதன் மூலமும்; சேவை வரி விதிக்கப்படும் இனங்களின் எண்ணிக்கையை அதிகரித்திருப்பதன் மூலமும் வரிச்சுமையை மக்களின் மீது ஏற்றி வைத்துள்ளார், ப.சிதம்பரம். கடந்த ஆண்டு சேவை வரியின் மூலம் 23,000 கோடி ரூபாய் வசூலித்த மைய அரசு, இந்த பட்ஜெட்டில் 34,500 கோடி ரூபாய் வசூலிக்கத் திட்டம் போட்டுள்ளது.

இதற்கு நேர்மாறாக, தரகு முதலாளிகளுக்கு வழக்கம் போலவே வரிச் சலுகைகள் வாரி வழங்கப்பட்டுள்ளன. முதலாளித்துவ நிறுவனங்களின் வருமானத்தின் மீது விதிக்கப்படும் வரி 35 சதவீதத்தில் இருந்து 30 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. பங்கு பரிவர்த்தனையின் மீது வெறும் 10 சதவீத அளவிற்கு மூலதன இலாப வரி விதித்தாலே, அரசுக்கு ஆண்டொன்றுக்கு 7,800 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும். பங்குச் சந்தையில் நுழைந்துள்ள அந்நிய நிதி முதலீட்டு நிறுவனங்களின் கோபத்தைச் சம்பாதித்துக் கொள்ளக் கூடாது என்பதற்காகவே, இந்த வரி விதிப்பை கருத்தளவில் கூட ப.சிதம்பரம் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். உலக வர்த்தகக் கழகத்தின் கட்டளைக்கு ஏற்ப, அந்நிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது விதிக்கப்படும் சுங்க வரி, 15 சதவீதத்தில் இருந்து 12.5 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

தரகு முதலாளிகளும், பன்னாட்டு நிறுவனங்களும் மைய அரசுக்குச் செலுத்த வேண்டிய வரி பாக்கி ஏறத்தாழ ஒரு இலட்சம் கோடி ரூபாயைத் தொட்டுவிட்டது. இதில் வெறும் 10,000 கோடி ரூபாயை இந்த நிதியாண்டில் வசூலித்தால் போதும் என்று வரி ஏய்ப்பு பேர்வழிகளுக்குச் சலுகை காட்டப்பட்டுள்ளது.

தாராள இறக்குமதி, பன்னாட்டு நிறுவனங்களின் போட்டியில் இருந்து சிறு தொழில்துறையைப் பாதுகாப்பதற்குப் பதிலாக, சிறு தொழில் துறைக்காக ஒதுக்கப்பட்டிருந்த 184 பொருட்களை இனி தரகு முதலாளிகளும் கூடத் தயாரிக்கலாம் என்ற சலுகை வழங்கப்பட்டுள்ளது. பொதுத்துறை வங்கிகள் மூலம் விற்கப்படும் அரசாங்க கடன் பத்திரங்களில் அந்நிய நிதி நிறுவனங்கள் முதலீடு செய்யவும்; நிலக்கரி சுரங்கத் தொழிலைத் தனியார்மயமாக்கும் முடிவுகளும் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளன.

பட்ஜெட் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்படுவதற்கு முன்பாகவே வெளியிடப்பட்ட பொருளாதார ஆய்வு அறிக்கையில், "நெல், கோதுமை, பருத்தி போன்ற விவசாய விளைபொருட்களுக்கு அரசு தரும் ஆதார விலையையும், அரசாங்கக் கொள்முதலையும் கைவிடுவது; சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய்க்குக் கொடுக்கப்படும் மானியத்தை நிறுத்துவது; ஓய்வூதிய நிதியைத் தனியார்மயப்படுத்துவது" உள்ளிட்டுப் பல தனியார்மய நடவடிக்கைகளை விரைந்து எடுக்கப் போவதாக மைய அரசு உறுதியளித்திருக்கிறது.

அதாவது, பட்ஜெட் வெறும் கண்துடைப்பு நடவடிக்கை என்பதற்கு இதைவிட வேறு ஆதாரம் இருக்க முடியாது. ஆனால் 'மார்க்சிஸ்டு'களோ, சமூக நலத்திட்டங்களுக்கு பட்ஜெட்டில் கூடுதலாக நிதி ஒதுக்காமல் இருப்பதுதான் பிரச்சினை எனப் புலம்பி, உண்மையை மூடி மறைக்கிறார்கள். ஒருபுறம் தாராளமய - தனியார்மய நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்திக் கொண்டு, இன்னொருபுறம் சமூகநலத் திட்டங்களுக்குக் கூடுதலாக நிதி ஒதுக்கிவிட்டால் மக்களின் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்பதைவிட மோசடித்தனம் வேறெதுவும் இருக்க முடியாது.

தரகு முதலாளிகளோ இன்னும் ஒரு படி மேலே போய், பட்ஜெட்டில் அறிவிக்கப்படும் சமூக நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் தனியாரையும் அனுமதிக்க வேண்டும் எனக் கோருகிறார்கள். அதாவது, அரசாங்கத்தின் பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தையும் தனியார்மயமாக்கு என்பதுதான் இதன் பொருள். இதற்கு 'மார்க்சிஸ்டு'களின் பதில் என்னவாக இருக்கும்? "ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் குறைந்தபட்ச பொது வேலைதிட்டத்தில் இக்கோரிக்கையை சேர்த்துவிட்டால் எங்களுக்கு ஆட்சேபணையில்லை" என்பதாகத்தான் இருக்கும்!

• ரஹீம்



படிப்பகம்

www.padippakam.com

## பறவைக் காய்ச்சல்:

# சந்தைப் பொருளாதாரத்தின் கோர விளைவு ஆதாயம் தேடும் பன்னாட்டு மருந்துக் கம்பெனிகள்

இந்தியாவில், ''எய்ட்ஸ்''-க்கு அடுத்துப் பரவலாக அறியப்பட்ட நோயாக பறவைக் காய்ச்சல் நோய் உள்ளது. எய்ட்ஸைப் போலவே, பறவைக் காய்ச்சல் நோயும் ஏகாதிபத்தியங்கள் உலகுக்கு அளித்திருக்கும் ''கொடை''. கோழி வளர்ப்பை இயற்கைக்கு முரணாகத் தொழில்மயமாக்கியதன் விளைவுதான் இந்த நோய்.

இந்த நோய் தாக்குவதற்கு முன்பாகவே தடுப்பு நடவடிக்கைகள் எடுக்காத இந்திய அரசு, இப்பொழுது கிராமம், கிராமமாகப் போய் கறிக் கோழிகளைக் கழுத்தை நெறித்துக் கொன்று புதைத்து வருகிறது. இதனால் ஒவ்வொரு நாளும் இத்தொழிலில் பல கோடி ரூபாய் நட்டமேற்படுவதாகக் கூறப்படுகிறது.

இந்த நட்டத்தைத் தாங்குபவர்கள் யார்? கோழிக் கறிக் கடைகளின் போர்டுகளில் காணப்படும் சுகுணா, வெங்கடேஷ்வரா, பயனீர் போன்ற கறிக்கோழி விற்பனையை ஏகபோகமாக நடத்திவரும் தரகு முதலாளித்துவ நிறுவனங்களுக்கு இந்த நோயால் சல்லிக் காசு கூட நட்டம் கிடையாது. மாறாக, இந்நிறுவனங்களோடு ஒப்பந்தம் போட்டுக் கொண்டு கோழி வளர்ப்புத் தொழிலை நடத்திவரும் சிறுவீத உற்பத்தியாளர்கள் - விவசாயிகள்தான் இந்த நட்டத்தைத் தாங்கிக் கொண்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் ஈரோடு, நாமக்கல் பகுதிகளில் மட்டும் ஏறத்தாழ 20,000 பேர் கறிக்கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் தொழிலே போண்டியாகிப் போன பிறகு, இவர்கள் வங்கிகளில் வாங்கிய கடனுக்கான வட்டியில் 4 சதவீதம் தள்ளுபடி செய்வதாக டாம்பீகமாக அறிவித்துள்ளது, இந்திய அரசு.

இது மட்டுமின்றி, உலக வர்த்தகக் கழகத்தின் காப்புரிமை சட்டத்தைக் காட்டி, உள்நாட்டிலேயே குறைந்த செலவில் பறவைக் காய்ச்சலுக்கான மருந்து தயாரிப்பதையும் தடுத்து நிறுத்தி விட்டது, மன்மோகன் சிங் கும்பல். ஒருபுறம், கறிக்கோழி விற்பனையை ஏகபோகமாகக் கொண்டுள்ள தரகு முதலாளித்துவ நிறுவனங்களும், இன்னொருபுறம் பன்னாட்டு மருந்து கம்பெனிகளும் பறவைக் காய்ச்சல் நோயால் ஆதாயம் அடைந்து வருவதை இக்கட்டுரை சுருக்கமாக எடுத்துக் காட்டுகிறது.

''ஹெச் 5 என் 1 (H5N1); கொடூரமான பறவைக் காய்ச்சல் நச்சுக் கிருமி இறக்கை கட்டி பரவுகிறது. நீர்ப்பறவைகள் தங்களின் குளிர்காலப் புகலிடமான இந்தியாவின நீர்தேக்கங்களில் வந்திறங்க ஆரம்பித்து விட்டன. அடுத்த 10 வாரங்களில் சீனாவிலிருந்து ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பறவைகள் தெற்கு ஆசியாவை நோக்கி இடம் பெயரும். இந்த அழகான பறவை கூட்டத்தின் ஊடாகவே அவற்றின் உடலில் 61 மனித உயிர்களை காவு கொண்ட ஹெச் 5 என் 1 நச்சுக் கிருமிகளும் பயணிக்கும். 1918-இல் மேற்குறிப்பிட்ட நச்சுக் கிருமியை ஒத்த ஹெச் 5 என் 1, இலட்சக்கணக்கான மக்களைக் காவு கொண்ட பின்னணியில் இப்போது என்ன விபரீத விளைவுகள் ஏற்படுமோ என்று உயிரியல் வல்லுனர்கள் அச்சத்தில் உள்ளனர்.''
*(மைக் டேவிஸ், 2005)*

நீர்ப்பறவைகள் மூலமாகவோ அல்லது உலகமயமாக்கலின் விளைவாக நாடு விட்டு நாடு பாயும் கோழி மற்றும் அதன் சார்ந்த பொருட்கள் மூலமாகவோ 2005-ஆம் ஆண்டு முதல் நம் நாட்டு கோழிப் பண்ணைகளில் பறவைக் காய்ச்சல் நோய் இருப்பதாக செய்தி கசிந்து கொண்டிருந்தது. பண்ணைகளில் கணிசமாக கோழிகள் இறக்க ஆரம்பித்தன. இது பறவைக் காய்ச்சல் என்று தொழிற்துறை வட்டாரத்தில் உறுதிப்படுத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, தரகு முதலாளியான வெங்கடேஷ்வரா நிறுவனம் ''ஆட்டோகிளேவ்'' என்கிற முறையில் பறவைக் காய்ச்சல் தடுப்பூசியை உற்பத்தி செய்து பயன்பாட்டுக்கு கொண்டு வந்தது. இச்செய்தியை ஒப்பந்த விவசாய நிறுவனங்களில் பணிபுரியும் கால்நடை மருத்துவர்கள் உறுதிப்படுத்துகிறார்கள். ஆனால், கோழி வளர்ப்பில் ஈடுபட்டு வரும் விவசாயிகளுக்கும் வெளியுலகத்திற்கும் இது பற்றி தெளிவாகத் தெரியாது.

இந்த விசயத்தை கோழி வளர்ப்பில் (முட்டை மற்றும் இறைச்சி) ஏகபோக கட்டுப்பாட்டை வைத்திருக்கும் தரகு மற்றும் பன்னாட்டு ஒப்பந்த நிறுவனங்களான வெங்கடேஷ்வரா, சுகுணா, பயனீர், சரன்பாக்ஸ்பான்ட் (இந்தியா) போன்றவை திட்டமிட்டே மூடி மறைத்தன. கோழி, கருவறை முதல் கறியாகி உணவு மேசைக்கு வரும் வரை ஒட்டுமொத்த சங்கிலியும் இவர்கள் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. இதில் ஒரு விவசாயி ஒப்பந்த தொழிலாளிதான். அதற்கு மேல் எந்த ஒரு உரிமையும் இல்லை. கோழி வளர்ப்பில் கோடிகளைப் பார்க்கும் நிறுவனங்கள் இச்செய்தியை மறைப்பதன் மூலம் வியாபாரத்தை நீட்டித்தார்கள். அதாவது, மனித இனத்திற்கு ஆபத்துகள் ஏற்படும் சூழலைப் பற்றிக் கடுகளவு கூட கரிசனம் காட்டாமல் ''பிணம் விழுந்தாலும் பரவாயில்லை; பணம் (வருமானம்) குறைந்துவிடக் கூடாது'' என்பதில் தெளிவாக இருந்தனர்.

ஒரு வழியாக பறவைக் காய்ச்சல் பற்றிய செய்தி, பத்திரிகைகளிலும் ஊடகங்களிலும் வந்தபிறகு கூட வெங்கடேஷ்வரா மற்றும் சுகுணா நிறுவனங்கள், தங்களது கூட்டமைப்பின் மூலம் ''வந்தது பறவைக் காய்ச்சல் இல்லை'' என்று அறிக்கை மேல் அறிக்கை விட்டன. இப்படிப்பட்ட சூழலில், ஒப்பந்த அடிப்படையில் கோழிகளை வளர்த்து வரும் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து பணம் பட்டுவாடா செய்வதை நிறுத்திவிட்டன. இதன் மூலம் 10 லட்சம் ஒப்பந்த கோழி விவசாயிகள் என்ன செய்வதென்று புரியாமல் தவிக்கின்றனர். இலாபம் என்றால் ஒட்டுமொத்தமாக அள்ளிச் செல்ல நிற்கும்



படிப்பகம்

www.padippakam.com

இந்நிறுவனங்கள், நட்டம் என்ற உடனே பண்ணைகள் பக்கம் எட்டிக் கூட பார்க்கவில்லை.

உலகளவில் பறவை காய்ச்சலின் ஊற்று மூலமே மேற்குறிப்பிட்ட வகையிலான ஒப்பந்த விவசாய நிறுவனங்களே ஆகும். இவர்களின் அதீத இலாபத்திற்காக, பரவலாக பல்இனக் கோழிகள் கொண்டு இயற்கை சார்ந்த பாரம்பரிய உற்பத்தியாக இருந்த புறக்கடை **(Backyard Poultry)** கோழி வளர்ப்பை ஒழித்துக் கட்டினர். அதற்கு மாறாக, ஒரு சில இனங்களைக் கொண்டு கோடிக்கணக்கான கோழிகளை குறிப்பிட்ட வட்டாரத்தில் குவித்து தொழிற்மயமாக்கி இயற்கைக்கு முரணாக அராஜக உற்பத்தியில் ஈடுபடுகின்றனர். இதனால் கோழிகளுக்கு இடையே நோய் பரவுவதும், கோழிகளிலிருந்து மனிதர்களுக்கு பரவுவதும் எளிதாக்கப்பட்டன. இப்படி கால்நடை மற்றும் கோழி வளர்ப்பில் தொழிற்மயமாக்கப்பட்டதன் விளைவாகவும், வனம் மற்றும் சுற்றுப்புற சூழலை நாசமாக்கியதாலும் புதிய புதிரான நோய்களான சார்ஸ் **(Sars)**, எபோலா **(Ebola)**, பறவைக் காய்ச்சல் போன்றவை மனித இனத்தை உலுக்க ஆரம்பித்துள்ளன என்கிறார்கள், வல்லுனர்கள். *(பிப். 23, 2006, தி இந்து)*

ஒப்பந்த விவசாய நிறுவனங்களில் ஒன்றான வெங்கடேஷ்வரா அரசுக்குத் தெரியாமல் பறவைக் காய்ச்சலுக்கான தடுப்பூசியை உற்பத்தி செய்து, அதை பற்றி எந்த ஒரு உண்மையையும் தெரிவிக்காமல் (லேபிள் கூட ஒட்டாமல்) சிறு, நடுத்தர மற்றும் இதர ஒப்பந்த நிறுவனங்களுக்கு விற்று கோடிகளை அள்ளிக் கொண்டுள்ளது.



**மகாராஷ்டிராவின் நவபூர் பகுதியில் பறவைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட கோழிகளைக் கொன்று புதைக்கும் சுகாதார ஊழியர்கள்.**

இன்னொரு பக்கம் ஹெச் 5 என் 1 நச்சுக்கிருமி மனிதர்களிடத்தில் நோயை உருவாக்குவதற்கான வீரியமிருந்த போதிலும், அதன் பரவும் ஆற்றல் மிகக் குறைவாக இருக்கிறது. இக்கிருமியின் மரபணுவில் மாற்றம் ஏற்பட்டு, நோய் உருவாகும் வீரியத்துடன் பரவும் ஆற்றலை பெற்று விட்டால் 1918, 1957, 1968 ஆகிய ஆண்டுகளில் இதேபோன்ற நோய்க்கிருமியால் பல லட்சக்கணக்கான மக்கள் மாண்டதுபோல இப்போதும் நேரிட வாய்ப்புள்ளது.

தற்சமயம் இந்த நோயை ஓரளவு குணப்படுத்தும் திறன் கொண்ட மருந்துகள் ''தேமி புளு'' **(Tamiflu)** மற்றும் ''ரிலின்சா'' **(Relenza)** ஆகியனவாகும். இப்பொழுது தேமிபுளு மட்டுமே உற்பத்தியில் உள்ளது. அமெரிக்காவை சார்ந்த ''கிளியெட் சயின்ஸ்'' **(Gliead sciecne)** நிறுவனம் காப்புரிமையை தேமிபுளுவுக்கு பெற்றுள்ளது. ''ரோகி'' **(Roche)** என்ற நிறுவனம் ''கிளியெட் சயின்ஸ்''க்கு கப்பம் கட்டி உற்பத்திக்கும் விற்பனைக்கும் அனுமதி பெற்றுள்ளது. நோயின் சிக்கலையும் ''ரோகி''யின் உற்பத்தித் திறனையும் கணக்கில் கொண்டு, சில அமெரிக்கா நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்குறிப்பிட்ட இரண்டு கம்பெனிகளிடம் ஏகபோக கட்டுப்பாட்டை நீக்கி கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். ஆனால், இவ்விரு நிறுவனங்களும் இந்த வேண்டுகோளை மறுத்துவிட்டு தங்களுடைய வியாபாரத்தைப் பாதுகாப்பதற்கான சட்டத்தை கொண்டு வர முயற்சிக்கின்றன. இப்பொழுது இந்நிறுவனத்தின் (கிளியெட் சயின்ஸ்) பங்குதாரர்களான அமெரிக்க இராணுவ செயலாளர் ரம்ஸ்ஃபீல்ட், புஷ் தேர்தல் நிதி புரவலர் டேவிங்நன், ரீகன் மற்றும் புஷ்ஷின் முன்னாள் செயலாளர் ஜார்ஜ் சூல்ட்ச் மற்றும் புஷ்-க்கு நெருக்கமான டீ விங்க் ஆகியோர் கோடிக்கணக்

**சிறு கோழிப் பண்ணை அதிபர்களும், தொழிலாளர்களும் பறவைக் காய்ச்சலால் தங்களுக்கு ஏற்பட்ட நட்டத்திற்கு உரிய நிவாரணம் கோரி மும்பையில் நடத்திய ஆர்ப்பாட்டம்.**






படிப்பகம்

www.padippakam.com

கான டாலர்களை இலாபமாகக் குவிக்கின்றனர்.

இன்னொரு பக்கம் இந்திய அரசு ''ரோக்கி''யிடமிருந்து துணை ஒப்பந்தம் பெற்றிருக்கும் ''ஹெட்ரோ'' என்ற நிறுவனத்திடமிருந்து ஒரு மாத்திரையை ரூ. 540-க்கு வாங்கிக் கொண்டிருக்கிறது. இந்தத் தொகையில் பெரும்பான்மையான பங்கு ராயல்டியாகும். இதே மருந்தை இந்திய நிறுவனமான ''சிப்லா'', ''27 ரூபாய்க்கு தயார் செய்கிறோம்; எங்களுக்கு சட்டரீதியான பாதுகாப்பு கொடுங்கள்'' என்று கேட்கிறது. ஆனால் இந்திய அரசு ''சிப்லா''வின் வேண்டுகோள்களுக்கு பதிலளிக்காமல் தொடர்ந்து மௌனம் காக்கிறது. ஏனென்றால், இது உலக வர்த்தகக் கழகத்தின் காப்புரிமைச் சட்டத்தை மீறுவதாகும். இப்படி உலக வர்த்தகக் கழகத்திற்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும் எதிராக, இக்கட்டான சூழ்நிலையில் கூட சுயசார்புடன் மருந்தைத் தயாரிக்கும் அதிகாரத்தை இழந்து நிற்கிறது இந்திய அரசு.

அதீத இலாபத்திற்காக, இயற்கைக்கு முரணாக, அராஜக உற்பத்தியில் ஈடுபடும் ஒப்பந்த விவசாய நிறுவனங்கள் ஒருபுறம்; இந்நிறுவனங்கள் பெற்றெடுத்த பறவைக் காய்ச்சலில் கோடிகோடியாய் கொழுக்கும் பன்னாட்டு மருந்து கம்பெனிகள் இன்னொருபுறம். இவ்விரு கொலைகார கொள்ளைக்கார கூட்டத்தின் நடுவே விவசாயிகளும் நாட்டுமக்களும் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

●●●

*[இக்கட்டுரையின் முதல் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மைக் டேவிஸ், அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவர். அமெரிக்காவிலுள்ள கலிஃபோர்னியா பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றி வரும் இவர், அயர்லாந்த நாட்டில் இயங்கிவரும் சோசலிச தொழிலாளர் கட்சியில் உறுப்பினராகவும் இருக்கிறார். பிரிட்டிஷ் காலனி ஆட்சியின் பொழுது இந்தியாவில் நடந்த பட்டினிச் சாவுகளுக்கும், காலனி அரசின் வரி வசூலுக்கும் இருந்த தொடர்புகளை ''லேட் விக்டோரியன் ஹோலாகாஸ்ட்'' என்ற நூலின் மூலம் மைக் டேவிஸ் அம்பலப்படுத்தியுள்ளார். அவர் எழுதிய ''நமது வாசற்படியில் வேதாளம்'' (Monster at our door) என்ற நூலில் இருந்து இம்மேற்கோள் எடுத்தாளப்பட்டுள்ளது.]*

● சுடர்

# அடி முதல் நுனி வரை அழுகி நாறும் சி.பி.எம்.

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி ஐந்துமுனைப் பகுதியில் அமைந்துள்ள 'லேனா திருமண மண்டபம்' நகரில் மிகப்பெரும் ஆடம்பரமான - வசதி படைத்தவர்கள் நாடும் திருமண மண்டபமாகும். அந்த மண்டபம் அமைந்துள்ள மதுரை சாலையில் 16.3.06 அன்று காலை 11 மணியளவில் சென்று கொண்டிருக்கையில் ''வைகை மணி இல்லத் திருமண விழா'' என்று பல வண்ணங்களில் ராட்சத வரவேற்பு போர்டுகள் திருமண மண்டபத்தின் முகப்பு வாயிலில் நிறுவப்பட்டிருந்தன. அனைத்து வரவேற்பு போர்டுகளை விட நல்ல சிவப்பு நிறத்தில் அரிவாள் சுத்தியலை வெள்ளை நிறத்தில் கம்பீரமாய் போட்டு ''திருமண விழாவிற்கு வருகை தரும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் தோழர் R. உமாநாத் அவர்களே! மதுரை பாராளுமன்ற உறுப்பினர் தோழர் மோகன் அவர்களே! சி.ஐ.டி.யு. மாநிலத் தலைவர் தோழர் குமார் அவர்களே! 'தீக்கதிர்' மேலாளர் தோழர் எஸ்.ஏ.பெருமாள் அவர்களே!''.... இன்னும் மாநில, மாவட்ட பொறுப்பாளர்களின் பெயர்களை எல்லாம் பொறித்து அனைவரையும் வருக! வருக! என 'கம்பீரமாக' வரவேற்றது சி.பி.எம். கட்சியின் விளம்பர போர்டு!

ஆகா! கம்யூனிச இயக்கத் தோழர் இல்லத் திருமண விழா போலிருக்கிறது. அந்தப் 'புரட்சிகர திருமணத்தை' எப்படியும் பார்த்துவிட வேண்டுமே என்ற துடிப்பில் அழையா விருந்தாளியாக மண்டபத்தினுள் நுழைந்து விட்டேன்.

சாதி-மத அடிப்படையில் இரண்டு பார்ப்பனர்கள் 'அக்கினி' வளர்த்து, வேதம் ஓதி, மணமக்களைத் தத்தம் பெற்றோர்களுக்கு 'பாதபூசை' செய்விக்கும் நிகழ்ச்சியை நடத்தி முடித்த பின் வரவேற்பு நிகழ்வு தொடங்கியது.

'மார்க்சிஸ்ட்' கம்யூனிஸ்ட் கட்சியின் தீவிர - முன்னணித் 'தோழர்' வைகை மணியின் அருந்தவப் புதல்வர் திருமண நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தவர், இந்தியன் வங்கி ஊழல் 'புகழ்' எம்.கோபாலகிருஷ்ணன்; திருமணத்தை நடத்தி வைத்தவர் சென்னை உயர்நீதி மன்ற 'நீதியரசர்' எஸ்.அசோக் குமார்; ஆக, வாழ்த்திப் பேசியவர்கள் பலரும் யாதவா சாதி பண மூட்டைகள், சர்வகட்சியிலுமுள்ள யாதவா சாதித் தலைவர்களே ஆவர். அத்துடன் 'மார்க்சிஸ்ட்' கம்யூனிஸ்ட் கட்சியின் மேற்கண்ட முக்கியப் புள்ளிகள், பகுதித் தொண்டர்கள், தி.மு.க., ம.தி.மு.க.வினர் பங்கேற்றனர். யாதவ சாதி 'உறவுக்கார' பாமர மக்கள் அமைதியாக உட்கார்ந்து வேடிக்கை பார்த்தனர்.

வாழ்த்திப் பேசியவர்களில் சிலர் வைகை மணி என்ற விளந்தூர் மணி மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் அதி தீவிர உறுப்பினர் என்றும் அவர் இல்லத் திருமண விழாவில் பங்கேற்பதில் பெருமிதம் கொள்வதாகவும் புகழ்ந்துரைத்தனர். கட்சி நிதியாக ரூபாய் இருபதாயிரத்தை 'தீவிர உறுப்பினர்' வைகை மணி, 'தோழர்' உமாநாத்திடம் 'பலத்த கரவொலி'க்கிடையில் வழங்கினார்.

அனைத்து 'தலைவர்'களுக்கும் பகட்டான பட்டாடைகள் - சால்வைகள் அணிவிக்கப்பட்டன. அதன்பின் தலைவாழை இலையில் 'முக்கனி', இனிப்பு வகைகள், வறுவல், பொறியல், வடை, பாயாசம், கூட்டு, பச்சடி வகையறா, அப்பளம், ரசம்; இதுபோக குடிப்பதற்கென்று தனித்தட்டில் சூப், ஐஸ்கிரீம் வகையறா, பிரியாணி, வெள்ளை 'சாதம்', சாம்பார், குழம்பு, பருப்புக் குழம்பு, வெண்ணெய், தயிர், மோர் என அமர்க்களப்படுத்தி விட்டார்கள். என் மதிப்பீடு, இலை ஒன்றுக்கு ரூ. 100 முதல் ரூ. 125 வரை இருக்கும். ஆடம்பர திருமண அழைப்பிதழ் ஒன்றின் மதிப்பு மட்டுமே ரூ. 25-க்கு மேல் இருக்கும்.

பரமக்குடி அருகிலுள்ள மேற்கு கொட்டகுடி கிராமத்தை சேர்ந்த மணி, பேருந்தில் ஓட்டுனராக வேலை பார்த்துள்ளார். அதனையொட்டி சி.ஐ.டி.யு. தொழிற்சங்க உறவு; பிறகு 'கம்யூனிஸ்ட்' உறவு! என்னதான் உழைத்தாலும் ஓட்டுனராக இருந்து கொண்டு



படிப்பகம்

www.padippakam.com



சி.பி.எம்.-இன் திடீர் பணக்கார 'தோழர்' வைகை மணி.

பொருளாதார ரீதியாக உயர முடியுமா? எனவே, வெளிநாடுகளுக்கு ஆள் அனுப்பும் புரோக்கர் தொழிலில் ஈடுபட்டார். மிகக் குறுகிய காலத்திலேயே கோடீஸ்வரனாகி விட்டார். பல்வேறு கிராமங்களில் நிலத்தை விற்று, நகையை விற்று, ஆடுமாடுகளை விற்று ரூ. 50,000/- முதல் ஐந்து லட்சம் வரை மணியிடம் பணம் செலுத்திவிட்டு, மாதக் கணக்கில்-ஆண்டு கணக்கில் காத்திருந்து காத்திருந்து, வெளிநாடும் செல்ல முடியாமல், கொடுத்த பணத்தையும் திரும்பப் பெற முடியாமல் ஏமாற்றப்பட்டவர்கள் ஏராளம். பிறகு ஏன் மணி கோடீஸ்வரன் ஆக முடியாது? கோடீஸ்வரன் ஆகி விட்டாலே 'அந்தஸ்து'மிக்கவர்களின் - சர்வ கட்சியினரின் உறவு தன்னாலேயே வந்து விடுகிறது அல்லவா? அந்த உச்சகட்ட காட்சிதான் இந்த திருமணம்!

எப்படிப்பட்ட தொழிலிலும் ஈடுபடலாம்; சாதிவெறி உணர்வில் திளைக்கலாம்; ஏமாற்றி மோசடி செய்தும் பணம் சம்பாதிக்கலாம்; கோடீஸ்வரன் ஆகலாம் என்ற கோட்பாடு ஓட்டுக்கட்சி அரசியலில் - சாதிவெறி அரசியலில் சாதாரணமாகி விட்டது. மேற்கண்ட சீரழிவுகளில் - பிழைப்புவாதத்தில் - ஆடம்பர மோகத்தில் எள்ளளவும் குறையாதவர்களே 'மார்க்சிஸ்ட்' கம்யூனிஸ்ட் கட்சியினர்! பார்ப்பனப் பண்பாட்டில் மூழ்கி திளைப்பவர்களே 'மார்க்சிஸ்ட்' கட்சியினர்! - என்பதற்கு இத்திருமண நிகழ்ச்சி மற்றுமோர் எடுத்துக்காட்டு.

சரி, 'மார்க்சிஸ்ட்' கம்யூனிஸ்ட் கட்சியின் 'தீவிர' உறுப்பினர் மணி தம் புதல்வனுக்கு எப்படிப்பட்ட இடத்தில் பெண் எடுத்துள்ளார் தெரியுமா? மணமகள் உஷாவின் தந்தையான சண்முகம், 1991-96-களில் கொள்ளைக் கூட்டத் தலைவி ஜெயா அமைச்சரவையில் சக்கை போடு போட்ட அமைச்சர் கண்ணப்பனின் பினாமியாக இருந்தவர். கண்ணப்பனின் பினாமிச் சொத்துக்களை சண்முகம் 'ஏப்பம்' விட்டு விட்டதாகவும், இதனால் கண்ணப்பன் தமது அடியாட்களைக் கொண்டு சண்முகத்தை வெளுத்து வாங்கி விட்டதாகவும், எனினும் சண்முகத்திடமிருந்து கோடிக்கணக்கான பணத்தையும், சொத்துக்களையும் மீட்க முடியவில்லை என்றும் பரவிய செய்திகள் மறுக்க முடியாத உண்மை என்பதை சிவகங்கை-காளையார்கோவில் பகுதி மக்கள் பெரும்பாலோர் நன்கறிவர். அந்த வகையில் காளையார் கோவிலில் மிகப் பெரிய ஒரே கோடீசுவரர் 'தோழர்' மணியின் சம்பந்தி அ.தி.மு.க. சண்முகம்தான்! எனவே இது பொருத்தமான சம்பந்தமாக அமைந்து விட்டது.

எப்படியோ, கட்சிக்கு ஆதரவாளராக கோடீஸ்வரர்கள் இருந்தால் தானே அப்போதைக்கப்போது நிதி பெறலாம்; தோழருக்கு தோழராச்சு! பணத்திற்கு பணமாச்சு! என்ற கொள்கையில் ஊறித் திளைக்கும் 'மார்க்சிஸ்ட்' கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் முதல் தொண்டர்கள் வரை என பெருந்திரளாக வந்து லேனா திருமண மண்டபத்தையே 'மார்க்சிஸ்டு'களின் மாநாடு போல ஆக்கிவிட்டார்கள்.

கேரளத்தின் முன்னாள் முதல்வரும், சி.பி.எம் - கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினராகவும் இருந்த ஈ.கே. நாயனார் தனது மகன் திருமணத்தை - பாசிச ஜெயா நடத்திய வளர்ப்பு மகன் திருமணத்தையே விஞ்சும் வகையில் சாதி-மத சடங்குகளோடு மிக ஆடம்பரமாக நடத்தினார். நாடாளுமன்ற சபாநாயகரான 'மார்க்சிஸ்ட்' சோம்நாத் சாட்டர்ஜி தனது பேரனுக்கு பார்ப்பன சனாதன முறைப்படி பூணூல் அணிவிக்கும் விழா நடத்தி அசத்தினார்.

'மார்க்சிஸ்டு' தலைவர்களே இப்படி ஆடம்பர மோகத்திலும், பார்ப்பனியத்திலும் மூழ்கி கிடக்கும்போது, திடீர் பணக்கார 'தோழர்' வைகை மணி தனது மகனுக்கு எளிய முறையில் சாதி-மத அடையாளமின்றி திருமணம் நடத்துவார் என்று எதிர்பார்க்க முடியுமா?

● வி. இரவி,
பரமக்குடி.

9-ஆம் பக்கத் தொடர்ச்சி

முறையைச் சேர்ந்த முதலாளித்துவ காம்ரேடாக இருக்கிறார் என்பதைத் தவிர இருதரப்புக்குமிடையே கொள்கை - சித்தாந்த வேறுபாடு எதுவும் கிடையாது. நீண்டகாலமாக உள்ள மூத்த தலைவர் என்பதாலும் மக்களிடம் கணிசமான செல்வாக்குமிக்கவர் என்பதாலும் ஓட்டுப் பொறுக்க அச்சுதானந்தனும் தேவை; கட்சியை முதலாளித்துவ கம்பெனியாக மாற்றிய விஜயனும் தேவை என்பதால், சி.பி.எம். தலைமை இரு தரப்பையும் சமரசப் படுத்த முயற்சித்தது.

ஆனால், சொத்தும், பதவியும் முறையாக பகிர்ந்தளிக்கப்படாததால், 'உட்கட்சி ஜனநாயகத்தை' வலியுறுத்தி, கேரள மாநில சி.பி.எம். மாநாட்டுக்கு முன்பிருந்தே கோஷ்டி சண்டைகள் வெடித்துக் கிளம்பின. இப்போது அது பகிரங்க தெருச்சண்டையாக முற்றிவிட்டது. சி.பி.எம். கட்சியின் அகில இந்திய செயலாளரான காரத் ஓடோடி வந்து, சமரசப்படுத்த முயற்சித்து தோல்வியடைந்தார். கட்சியின் அரசியல் தலைமைக்குழு அவசரமாகக் கூடி, கோஷ்டி சண்டையை நிறுத்தக் கோரி விதித்த கட்டுப்பாடுகளும் ஆலோசனைகளும் செல்லாக் காசாகிப் போயின. கேரளாவில் கட்சியே உடைந்து போய்விடுமோ என்ற பதற்றமான நிலையில், பீதியடைந்த சி.பி.எம். தலைமை வேறு வழியின்றி அச்சுதானந்தனை தேர்தலில் போட்டியிட அனுமதித்துள்ளது. தேர்தலில் சி.பி.எம். கூட்டணி வெற்றி பெற்றுவிட்டால், அதன்பிறகு முதல்வர் - அமைச்சர் பதவிகளுக்கான நாய்ச் சண்டை தொடரக் காத்திருக்கிறது.

கட்டுப்பாடுமிக்க கட்சி, உழைக்கும் மக்களுக்கான கட்சி, லட்சிய உணர்வு கொண்ட புரட்சிக் கட்சி என்றெல்லாம் எவ்வளவுதான் மாய்மாலங்கள் செய்தாலும், சி.பி.எம். கட்சியானது சட்டமன்ற - நாடாளுமன்ற சாக்கடையில் விழுந்து புரளும் இன்னுமொரு ஓட்டுக் கட்சிதான். ஓட்டுக் கட்சிகளின் பாரம்பரியத்துக்கேற்ப அக்கட்சியானது ஏற்கெனவே முதலாளித்துவ கம்பெனியாகி விட்டது; கோஷ்டிச் சண்டைகள் பகிரங்க தெருச்சண்டைகளாக முற்றிவிட்டன. ஓட்டுக் கட்சிகளின் பொறுக்கி அரசியல் கலாச்சாரப்படி, இந்தக் கோஷ்டிச் சண்டையால் பாதிக்கப்பட்ட ஒரு சி.பி.எம். தொண்டர் கோழிக்கோட்டில் தற்கொலை செய்து கொண்டு 'தியாகி'யாகி விட்டார். நல்ல முன்னேற்றம்தான்!

● குமார்



படிப்பகம்

www.padippakam.com

# “போர்க் குற்றவாளி ஜார்ஜ் புஷ்ஷே, திரும்பிப் போ!”

## - தமிழகத்தைத் திரும்பிப் பார்க்க வைத்த புரட்சிகர அமைப்புகளின் ஆர்ப்பாட்டம்

**ஜா**ர்ஜ் புஷ் கடந்த மாதம் இந்தியாவிற்கு வந்து சென்றபொழுது, எந்தவொரு அமெரிக்க அதிபரும் சந்தித்திராத எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகளான ம.க.இ.க., பு.மா.இ.மு., வி.வி.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய அமைப்புகள் ஒன்றிணைந்து, பிப்ரவரி 27-ஆம் தேதி தொடங்கி, புஷ் அமெரிக்காவிற்குத் திரும்பிச் செல்லும் வரை, புஷ் எதிர்ப்பு இயக்கத்தைத் தமிழகத்தின் பல்வேறு நகரங்களிலும், கிராமப்புறங்களிலும் நடத்தின. ''உலக மேலாதிக்கப் போர் வெறியன் புஷ்ஷே திரும்பிப் போ! சர்வதேச பயங்கரவாதி - போர் குற்றவாளி புஷ்ஷைத் தூக்கில் போடுவோம்'' என்ற முழக்கங்களை முன் வைத்து சுவரொட்டிகள், பிரசுரங்கள், விளம்பரத் தட்டிகள், கண்டன ஊர்வலம், ஆர்ப்பாட்டம், பேருந்துப் பிரச்சாரம் எனப் பல்வேறு வடிவங்களில் இவ்வியக்கம் மேற்கொள்ளப்பட்டது.

கண்டன ஊர்வலங்களிலும், பேருந்து பிரச்சாரத்தின் பொழுதும், பொது மக்கள் கூடும் இடங்களிலும் புஷ்ஷைப் போல முகமூடி அணிந்த ஒருவரை, நாய்ச் சங்கிலியால் கட்டி, செருப்பில் அடிப்பது போன்ற காட்சி விளக்கத்துடன் இவ்வியக்கம் நடந்தது.

புஷ் இந்தியாவில் காலடி எடுத்து வைத்த மறுநிமிடமே, புஷ்ஷின் உருவ பொம்மையை, பொதுமக்கள் கூடும் இடங்களில் தூக்கில் கட்டித் தொங்கவிட்டு, அதன் கீழே, ''சர்வதேச பயங்கரவாதி - போர் குற்றவாளி புஷ்ஷைத் தூக்கில் போடுவோம்'' என்ற முழக்கம் முன்வைக்கப்பட்டது.

இந்த எதிர்ப்பு இயக்கம், நமது நாட்டை அமெரிக்க அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை செய்ய இன்னுமொரு சுதந்திரப் போராட்டம் நடத்த வேண்டும் என்பதை வலியுறுத்துவதாக அமைந்தது.

• **சென்னையில்** - மதுரவாயல் பகுதியில் அமைந்துள்ள வெங்காய மண்டியில் இருந்து ஊர்வலம் தொடங்குவதற்கு பு.ஜ.தொ.மு. அனுமதி கோரியிருந்தது. இதற்கு முதலில் அனுமதி அளித்த போலீசார், ஊர்வலம் நடைபெறவிருந்த பிப்.28 காலையில் அனுமதி மறுத்து விட்டனர். இதுபற்றி மாநகர ஆணையரிடம் முறையிட்டதற்கு, ''இது அரசு உத்தரவு, நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது'' எனக் கைவிரித்து விட்டார். இத்தடையை மீறி கண்டன ஊர்வலம் நடத்துவதற்கு தோழர்கள் வெங்காயமண்டியில் கூடியவுடனேயே, அதைத் தடுப்பதற்கு மாவட்ட போலீசு கண்காணிப்பாளர் பறந்து வந்தார். அந்த அதிகாரியிடம் பு.ஜ.தொ.மு. தோழர்கள், ''இது எங்களின் ஜனநாயக உரிமை'' என விடாப்பிடியாகப் போராடி, கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாக நடத்தினர்.

• **கோவையில்** 01.03.06 அன்று நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த ஆர்ப்பாட்டத்திற்கு போலீசார் அனுமதி மறுத்துவிட்டனர். எனினும், அப்பகுதி தோழர்கள் புஷ் வருகையை எதிர்த்து வெளியிடப்பட்ட 2,000 துண்டுப் பிரசுரங்களைப் பொதுமக்கள் மத்தியில் கொடுத்து பிரச்சாரம் செய்தனர். அன்றே, நகரின் முக்கியமான 30-க்கும் மேற்பட்ட இடங்களில் புஷ்ஷின் உருவ பொம்மையைத் தூக்கிலிட்டு, ஆயிரக்கணக்கான பொதுமக்களின் கவனத்தை ஈர்த்தனர்.

• ம.க.இ.க.வும் தோழமை அமைப்புகளும் இணைந்து **திருச்சியில்,** பிப்ரவரி 27-ஆம் தொடங்கி 3.3.06 முடிய புஷ் எதிர்ப்பு இயக்கம் மேற்கொண்டன. புஷ் முகமூடி அணிந்த ஒருவரைச் சங்கிலியால் கட்டிப் பிணைத்து, ஒவ்வொரு பேருந்திலும் ஏற்றி, ''இவன் தான் கொலைகாரன்; இவனை இந்தியாவிற்குள் நுழையவிடக் கூடாது'' என்ற வகையில் பேருந்து பிரச்சாரம் நடத்தப்பட்டது. பிப்ரவரி 28-ஆம் தேதி அண்ணாசிலை அருகேயும், மார்ச் 1 அன்று புத்தூர் நாலு ரோட்டிலும், 3.3.06 அன்று திருவரம்பூர் பேருந்து நிலையத்திலும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

பிப். 28 அன்று ஆழ்வார் தோப்பில் நடைபெற்ற தெருமுனைக் கூட்டத்தின் பொழுது புஷ் முகமூடி அணிந்திருந்த தோழரைச் சூழ்ந்து கொண்ட 50 சிறுவர்கள், ''புஷ்ஷை எங்களிடம் விட்டு விடுங்கள்; நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்'' என ஆவேசமாகக் கூறினர். அத்தெருமுனைக் கூட்டம் முடியும் வரை அச்சிறுவர்கள் தோழர்களுடன் இணைந்து முழக்கமிட்டனர்.

திருச்சியின் புறநகர் பகுதியான இலால்குடி, புள்ளம்பாடி ஆகிய ஊர்களில் விவசாயிகள் விடுதலை முன்னணி, ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்பு சங்கம், ஓட்டல் தொழிலாளர் பாதுகாப்பு சங்கம் ஆகிய அமைப்புகள் இணைந்து, 13 இடங்களில் புஷ்ஷின் உருவ பொம்மையைத் தூக்கிலிட்டன

• **ஒசூரில்** பு.ஜ.தொ.மு., வி.வி.மு., ஆகிய அமைப்புகள் இணைந்து பிப். 28 அன்று நடத்திய கண்டன ஊர்வலம் பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கும் படி சிறப்பாக நடந்தது.

**மதுரையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் செருப்பு மாலை போடப்பட்டு அவமானப்படுத்தப்படும் ''ஜார்ஜ் புஷ்''.**





படிப்பகம்

www.padippakam.com

''இந்த ஊர்வலம் பொதுமக்கள் விழிப் படையும் வகையில் நடந்ததாக'' பல ரும் பாராட்டினர். ஊர்வலத்தின் பொழுது ரூ. 1,350/- நிதி வசூலானது. இது ஒன்றே, புஷ்ஷை எவ்வளவு தூரம் உழைக்கும் மக்கள் வெறுக்கிறார்கள் என்பதற்கும், ஏகாதிபத்திய எதிர்ப்பை எவ்வளவு தூரம் ஆதரிக்கிறார்கள் என் பதற்கும் சான்றாக உள்ளது. ஊர்வலத் தின் முடிவில் காந்தி சிலை அருகே, ஏறத்தாழ 1 மணி நேரத்திற்கும் மேலாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஓசூர் நகரில் நான்கு இடங்களில் தூக்கில் தொங்கவிடப்பட்ட புஷ் உருவ பொம்மைகளுள், ஒன்றினை மட்டும் போலீசார் எடுத்துச் சென்றுத் தங்களின் அமெரிக்க விசுவாசத்தைக் காட்டிக் கொண்டனர். ஓசூர் தொழிற் பேட்டையில், ''புஷ்ஷே திரும்பிப் போ'' என்ற முழக்கத்தை முன்வைத்து, தெருமுனைக் கூட்டங்கள் நடத்தப்பட் டன.

இந்த இயக்கம் முடிந்து, மார்ச் மாத பு.ஜ. இதழை விற்பனைக்கு எடுத்துச் சென்றபொழுது, ''புஷ்ஷைக் கட்டி இழுத்து வந்தது நீங்க தானே; புஷ் ஷைத் தூக்கில் தொங்கவிட்டது நீங்க தானே'' எனப் பலரும் குறிப்பிட்டுச் சொன்னது, இந்த இயக்கத்தின் வெற் றிக்குச் சான்றாக அமைந்தது.

• **பென்னாகரத்தில்** புஷ் வரு கையை எதிர்த்து பரவலாக சுவரொட்டி கள் ஒட்டப்பட்டன. தருமபுரியில் சுவ ரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த இரண்டு தோழர்களைக் கைது செய்து, ஒருநாள் சட்டவிரோதக் காவலில் வைத்திருந்து, பின்னர் வீட்டிற்கு அனுப்பி வைத்தது, தருமபுரி போலீசு.

புஷ் முகமூடி அணிந்து கொண்டு நடத்தப்பட்ட பேருந்து பிரச்சாரத்தைத் தடுப்பதற் காக முனைந்த போலீசார், ''இம்முகமூடியைப் பார்த்துக் குழந்தைகள் பயப்படுவதாக'' ஒரு புளுகு மூட்டையை அவிழ்த்துவிட்டது. ஈராக் கில் ஐந்து இலட்சம் குழந் தைகள் சாவுக்கு காரண மான இவனை அம்பலப் படுத்தவில்லை என்றால், இன்னும் பல இலட்சம் குழந்தைகள் இறந்து போக நேரிடும் எனத் தோழர்கள் பதிலடி கொடுத்தவுடன் மறு பேச் சில்லாமல் வாயை மூடிக் கொண்டனர்.




**கரூர் நகரில் தூக்கில் தொங்கும் ''ஜார்ஜ் புஷ்ஷின் பிரேதம்.''**

புஷ் உருவ பொம்மை தூக்கில் தொங்கவிடப்பட்டிருந்ததைப் புரியா மல் பார்த்தவர்களுக்கு பொதுமக்க ளில் சிலரே, ''இன்று ஜார்ஜ் புஷ் இந்தி யாவிற்கு வருகிறான்; அவனுக்கு எதிர்ப்பு தெரிவித்து வி.வி.மு. தோழர் கள் தூக்கில் இட்டுள்ளனர்'' என விளக் கம் அளித்தனர்.

புஷ் தூக்கில் தொங்கவிடப்பட்ட செய்தி கிடைத்தவுடனேயே, தோழர்க ளைக் கைது செய்ய போலீசு நாயாய் அலைந்தது. தூக்கில் தொங்கவிடப் பட்ட புஷ் உருவ பொம்மைகளைப் போலீசார் அவிழ்க்க முயன்றதைப் பொதுமக்கள் வேடிக்கை பார்க்கக் கூடி யது, இவ்வியக்கத்திற்கு நல்ல பிரச்சார மாகவும் அமைந்தது.

• கிருஷ்ணகிரி மாவட்டம் **மத்தூரில்,** மையப் பேருந்து நிலையத்தி லேயே புஷ் உருவ பொம்மை தூக்கில் இடப்பட்டதோடு, ''புஷ் ஒரு சர்வதேச பயங்கரவாதி; போர்க் குற்றவாளி'' என அங்கு கூடியிருந்த மக்களிடையே பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. பேருந்து நிலையத்தைச் சேர்ந்த முசு லீம் வியாபாரிகள், ''இவனை இப்படித் தான் தூக்கில் போட வேண்டும்'' எனக் கருத்துக் கூறினார்கள். புஷ் வரு கையை எதிர்த்துப் பகுதியெங்கும் சுவ ரொட்டிகளும் ஒட்டப்பட்டன.

• **தஞ்சையில்** ம.க.இ.க. - பு.மா.இ.மு. சார்பாக 28.2.06 அன்று நடத்தப்பட்ட பேரணியின் பொழுது, ஜார்ஜ் புஷ் வேடமிட்ட ஒருவர், மன் மோகன் சிங், ப.சிதம்பரம் வேடமிட்ட இருவரை நாய்ச் சங்கிலியால் கட்டிக் கொண்டு நடந்து வருவது போலவும்; ஓட்டுக் கட்சிகளின் சின்னம் அணிந்த வர்கள் அதற்குப் பாதுகாப்பாகச் சுற்றி இருப்பது போலவும் செய்து காட்டப் பட்ட காட்சி விளக்கம் பொதுமக்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்தது. ஊர்வ லத்தின் இறுதியில் பனகல் கட்டிடம் எதிரே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தஞ்சைக்கு ஆளுநர் பர்னாலா வந் திருந்ததையொட்டி பலத்த போலீசு பாதுகாப்பு இருந்த போதிலும், நகரில் மூன்று இடங்களில் புஷ் உருவ பொம் மைகள் தூக்கில் இடப்பட்டன. மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தூக்கில் தொங்கிக் கொண்டிருந்த புஷ் உருவ பொம்மை ஆயிரக்கணக்கான பொதுமக்களின் கவனத்தை ஈர்த்தது. பேருந்து நிலையம் அருகே தொங்க விடப்பட்டிருந்த புஷ் உருவ பொம் மையை, போலீசார் படாதபாடுபட்டு அறுத்துப் போட்டதை உள்ளூர் தொலைக்காட்சி நிலை யம் ஒளிபரப்பியது.

**சென்னையில் போலீசார் விதித்த தடையை எதிர்த்துப் போராடி நடந்த ஆர்ப்பாட்டம்.**



இந்த நகரங்கள் தவிர்த்து, சேலம், கரூர், இராணிப்பேட்டை, மதுரை, கடலூர், உசிலம் பட்டி உள்ளிட்டு தமிழகத் தின் பல்வேறு பகுதிகளி லும் பேரணி, ஆர்ப்பாட் டம், பேருந்து பிரச்சாரம், புஷ் உருவ பொம்மை யைத் தூக்கில் தொங்க விடுதல் ஆகிய வடிவங்க ளில் புஷ் எதிர்ப்பு இயக் கம் நடத்தப்பட்டது.

— ம.க.இ.க. - வி.வி.மு. -
பு.ஜ.தொ.மு. -
பு.மா.இ.மு., தமிழ்நாடு.



படிப்பகம்

www.padippakam.com

## கோக் மற்றும் பன்னாட்டு நிறுவனப் பொருட்கள் எரிப்புப் போராட்டம்:

# மறுகாலனியாதிக்க எதிர்ப்பு தீ பரவட்டும்!

எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடி தூக்கு மேடையேறிய தோழர்கள் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோர் எந்தக் காலனியாதிக்கத்தை முறியடிக்கவும் அடிமைத்தனத்தை ஒழித்துக் கட்டவும் தங்களது இன்னுயிரைத் தியாகம் செய்தார்களோ, அந்தக் காலனியாதிக்கம் இன்றும் புதிய வடிவில் தொடர்கிறது. அன்றைய காலனியாதிக்கத்தைவிட தற்போதைய மறுகாலனியாதிக்கம் மிகவும் சதித்தனமானது; கொடூரமானது. தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் என்ற பெயரில் வந்துள்ள ஏகாதிபத்தியக் கொள்ளையையும் மறுகாலனியாதிக்கத்தையும் வீழ்த்தவும் விடுதலைப் போருக்கு அணிதிரளவும் அறைகூவி மாவீரன் பகத்சிங்கின் 75-வது நினைவுநாளில் (மார்ச் 23) கோக் மற்றும் பன்னாட்டு நிறுவனப் பொருட்களை எரிக்கும் போராட்டத்தை ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் அறிவித்தன.

''காட்'' ஒப்பந்தம் கையெழுத்தான போதே நாட்டை அடிமைப்படுத்தும் இத்துரோகத்தை எதிர்த்து முதல்குரல் கொடுத்து ரயில் மறியல் போராட்டம் நடத்திய இவ்வமைப்புகள், தொடர்ச்சியாக ஏகாதிபத்திய-மறுகாலனியாதிக்க எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தி வருகின்றன. குறிப்பாக, தாமிரவருணியை உறிஞ்சும் அமெரிக்க கோக்கிற்கு எதிராகவும் தண்ணீர் தனியார்மயத்துக்கு எதிராகவும் தமிழகமெங்கும் மிக விரிவான அளவில் பிரச்சார இயக்கத்தையும் போராட்டத்தையும் நடத்திய இவ்வமைப்புகள், அதன் தொடர்ச்சியாக இப்போராட்டத்தை அறிவித்து கடந்த மூன்று மாதங்களாக காலனியாதிக்க எதிர்ப்பு அரசியல் பிரச்சாரத்தையும் நாட்டுப்பற்றுணர்வையும் உழைக்கும் மக்களிடம் வீச்சாகக் கொண்டு சென்றன.

இப்போராட்டத்தை அறிவித்து தமிழகத்தின் பல பகுதிகளில் சுவரெழுத்துக்கள், பல்லாயிரக்கணக்கில் துண்டுப் பிரசுரங்கள், தட்டிகள், சுவரொட்டிகள், செஞ்சட்டையில் ''தாமிரவருணி எங்கள் ஆறு! அமெரிக்க கோக்கே வெளியேறு!'' என்ற முழக்கத்துடன் அந்நியப் பொருட்கள் எரிப்புப் போராட்டத்தை விளக்கி கிராமங்கள், நகரங்கள், சந்தைகள், ஆலைகள், கல்லூரிகள், பேருந்துகள், ரயில்கள் என வாய்ப்புள்ள எல்லா இடங்களிலும் இவ்வமைப்பினர் தொடர்ச்சியாகப் பிரச்சாரத்தை மேற்கொண்டனர். நாட்டுப்பற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசியலும் போராட்ட விதையாக தமிழக மக்களின் நெஞ்சங்களில் ஆழமாகப் பதிந்தது.

கடந்த பிப்ரவரி 26-ஆம் தேதியன்று நெல்லை - தாழையூத்தில் கோக் எதிர்ப்பு மற்றும் தண்ணீர் தனியார்மய எதிர்ப்பு கருத்தரங்கமும் ஓவியக் கண்காட்சியும் நடைபெற்றது. நெல்லையில் கடந்த ஆண்டு செப்.12 அன்று இப்புரட்சிகர அமைப்புகள் அமெரிக்க கோக்கிற்கு எதிராக நடத்திய பேரணி, ஆர்ப்பாட்டம், மறியல் போராட்டத்தைத் தொடர்ந்து, கோக் எதிர்ப்பு பிரச்சாரம் அனைத்திற்கும் தடைவிதித்து கோக்கின் அடியாளாகவே செயல்பட்டது நெல்லை போலீசு. போலீசின் அச்சுறுத்தல்களையும் கெடுபிடிகளையும் மீறி நெல்லை - கங்கை கொண்டான் பகுதிவாழ் மக்கள் பங்கேற்ற இக்கருத்தரங்கில், கோக்கினால் நாசமாக்கப்பட்ட கேரளத்தின் பிளாச்சிமடாவைச் சேர்ந்த மலைவாழ் மக்கள் பாதுகாப்புக் குழு தோழர் தங்கமணி, பிளாச்சிமடா கோக் எதிர்ப்புப் போராட்டக்குழு நிறுவனர் விளயோடி வேணுகோபாலன் ஆகியோர் அமெரிக்க மேலாதிக்கத்தின் அங்கமான கோக்கை இந்தியாவி









படிப்பகம்

www.padippakam.com

லிருந்தும் உலகிலிருந்தும் விரட்ட வேண்டிய அவசியத்தையும் கேரள மக்களின் போராட்ட அனுபவங்களையும் தமது சிறப்புரையில் குறிப்பிட்டனர். நெல்லை மாவட்ட வணிகர் சங்கப் பேரவைத் தலைவர் முருகேசன், கோக் ஆலை அமைந்துள்ள மானூர் ஊராட்சி ஒன்றிய சேர்மன் செல்வி விஜயா ஆகியோர் பங்கேற்று உரையாற்றிய இக்கருத்தரங்கமும் ஓவியக் கண்காட்சியும் கோக் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களை விரட்டியடிக்கும் சுதந்திரப் போராட்டத்துக்கு அறைகூவுவதாக அமைந்தன.

நெல்லையைத் தொடர்ந்து சென்னை, வேலூர், ஆம்பூர், உளுந்தூர் பேட்டை, கோவை, திருச்சி, ஓசூர் முதலான இடங்களில் கோக் மற்றும் பன்னாட்டு நிறுனப் பொருட்கள் எரிப்புப் போராட்ட விளக்க கருத்தரங்குகள் நடைபெற்றன. மருத்துவர்கள், தொழிற்சங்க முன்னணியாளர்கள், வழக்குரைஞர்கள், வணிகர் சங்கப் பேரவையின் பிரமுகர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றிய கருத்தரங்குகளும் அரங்கில் வைக்கப்பட்டிருந்த ஓவியக் கண்காட்சியும் பார்வையாளர்களை போராட அறைகூவி அழைப்பதாக அமைந்தன.

ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளி - தியாகத் தோழர் பகத்சிங் 75-வது நினைவு நாளான மார்ச்ச 23-ஆம் நாளன்று இப்புரட்சிகர அமைப்புகள் தாங்கள் செயல்படும் பகுதிகளில் பேரணி - ஆர்ப்பாட்டத்தோடு கோக் மற்றும் பன்னாட்டு நிறுவனப் பொருட்கள் எரிப்புப் போராட்டத்துக்கு முறையாக அனுமதி பெற்றிருந்த போதிலும் திடீரென 23-ஆம் தேதியன்று இப்போராட்டத்துக்கு தமிழகமெங்கும் தடைவிதித்து, தன்னை ஏகாதிபத்திய அடியாள் என்பதை நிரூபித்துக் காட்டியது, தமிழக போலீசு. பல பகுதிகளில் முன்னணித் தோழர்கள் முதல் நாளே கைது செய்யப்பட்டனர். அனுமதி மறுப்பினால் பல பகுதிகளில் திட்டமிட்டபடி போராட்டத்தை நடத்த இயலாத நிலையில், தடையை மீறி இப்போராட்டம் பல்வேறு பகுதிகளில் எழுச்சியோடு நடந்தது. வெள்ளை ஏகாதிபத்தியத்துக்கு சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்த தோழர் பகத்சிங்கின் படங்களை ஏந்தி, செங்கொடிகள் விண்ணில் உயர, அத்தியாகத் தோழருக்கு வீரவணக்கம் செலுத்தி, அவர் காட்டிய வழியில் ஒரு தீரமிக்க சுதந்திரப் போருக்கு நாட்டு மக்கள் மீண்டும் கிளர்ந்தெழ அறைகூவி அழைப்பதாக இப்போராட்டம் நடந்தது.

நாமக்கல் நகரில் போலீசு தடையை மீறி, பேருந்து நிலைய வாயிலில் விண்ணதிர முழக்கங்களுடன், மாலை 6 மணியளவில் பன்னாட்டு நிறுவனப் பொருட்கள் எரிக்கப்பட்டன. முன்னணித் தோழர்கள் கைது செய்யப்பட்டனர். ஓசூரில் தடையை மீறி லேலண்டு ஆலை முன்பாக மாலை 5 மணியளவில் அன்னியப் பொருட்களைத் தீயிட்டுக் கொளுத்தும் போராட்டம் திரளான தொழிலாளர்களின் ஆதரவோடு நடந்தது.

கோவில்பட்டியில், போலீசு விதித்த திடீர் தடையை மீறி பேருந்து நிலையம் அருகே நடந்த ஆர்ப்பாட்டம், நூற்றுக்கணக்கான மக்களின் கவனத்தை ஈர்த்து, உலக வர்த்தகக் கழக ஆட்சியை வீழ்த்த அறைகூவுவதாக அமைந்தது. சிவகங்கையில், அரண்

## நம்பிக்கையான தொடக்கம்!

**அ**னைத்துலக மகளிர் தினத்தன்று (மார்ச் 8), அதன் உண்மையான நோக்கத்தை ஈடுசெய்யும் வகையில் திருச்சியில் *பெண்கள் விடுதலை முன்னணி* எனும் புதிய அமைப்பு உதயமானது. தோழர் இந்துமதி தலைமையில் நடந்த இவ்வமைப்பின் தொடக்க விழாவில், ம.க.இ.க. மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் கதிரவன் சிறப்புரையாற்றி வர்க்கப் போராட்டத்தில் முன்னணியாகத் திகழ வாழ்த்தினார். வேலூர் ம.க.இ.க. தோழர் வாணி, மறுகாலனியாதிக்கத்துக்கு எதிராக அமைப்பு ரீதியாகப் பெண்கள் அணிதிரள வேண்டிய அவசியத்தை விளக்கி, வாழ்த்துரை வழங்கினார். நிர்வாகிகள் தேர்வைத் தொடர்ந்து, புதிய நிர்வாகிகள் புதிய ஜனநாயகப் புரட்சிப் பாதையில் பெண்கள் விடுதலைக்காகத் தொடர்ந்து போராட உறுதியேற்றனர். திரளாக வந்திருந்த உழைக்கும் வர்க்கப் பெண்களிடம் புதிய நம்பிக்கையை விதைத்த இத்தொடக்கவிழா, பெண்கள் அமைப்பு ரீதியாகத் திரள வேண்டிய அவசியத்தை உணர்த்துவதாக அமைந்தது. பாதை விரிந்து கிடக்க, புரட்சிப் பயணத்தில் பெண்கள் விடுதலை முன்னணி தனது காலடியை எடுத்து வைத்துள்ளது.

*— பெண்கள் விடுதலை முன்னணி, திருச்சி.*

*மார்ச் 23, 2006*

## ஏகாதிபத்திய எதிர்ப்பு போராளி தியாகத் தோழர் பகத்சிங்கின் 75-வது நினைவு நாள்!



**ஏ**காதிபத்திய எதிர்ப்பில் உறுதி, சாதி-மத அடையாளங்களை முற்றாக விலக்கிய மதச்சார்பின்மை, சோசலிசத்தின் மீது ஆழ்ந்த பற்றும் நம்பிக்கையும் - என தியாகத் தோழர் பகத்சிங் தோற்றுவித்த புரட்சிகர கம்யூனிச பாரம்பரியத்தை என்றென்றும் கட்டிக் காப்போம்; ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராடி நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் தனது இன்னுயிரை ஈந்த அளப்பரிய தியாகம், காலனியாதிக்கவாதிகளைக் கதிகலங்க வைத்த மாவீரம், போராட்டத்தில் உறுதி, நாட்டு விடுதலையின் மீது மாளாக் காதல் - ஆகிய அவரது உயரிய கம்யூனிச பண்புகளை வழுவாமல் பின்பற்றுவோம்; ஏகாதிபத்தியத்தையும் மறுகாலனியாதிக்கத்தையும் வீழ்த்தி நாட்டை விடுதலை செய்யும் மகத்தான பணியில் எம்மை அர்ப்பணித்துக் கொள்வோம் என்று இந்நாளில் உறுதியேற்கிறோம்!

*தியாகத்தோழர் பகத்சிங்கிற்கு எமது வீரவணக்கம்!*

*ஓங்கட்டும் பகத்சிங்கின் புகழ்!*
*ஒழியட்டும் மறுகாலனியாதிக்கம்!*

*- ஆசிரியர் குழு, புதிய ஜனநாயகம்.*



படிப்பகம்

மனை வாயிலருகே தடையை மீறி ஆர்ப்பாட்டம் செய்த தோழர்கள் கைது செய்யப்பட்டனர். சென்னையில், பெண்கள்-குழந்தைகளுடன் தடையை மீறி ஆர்ப்பாட்டம் செய்த 130 தோழர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். மதுரை, உசிலம்பட்டி, திருச்சி, தஞ்சை நகரங்களில் ஆர்ப்பாட்டத்திற்காக தோழர்கள் அணிதிரளும் போதே கைது செய்யப்பட்டனர். திருப்பத்தூரில், 5 அடி உயரத்துக்கு கோக் பாட்டில் உருவப் பொம்மையுடன் முழக்கமிட்டபடியே ஊர்வலமாக வந்த தோழர்களும் போராட்டத்தில் பங்கேற்க, கிருஷ்ணகிரி - வேலூர் மாவட்டங்களிலிருந்து அணிஅணியாகத் திரண்டு வந்த தோழர்களும் தடுத்து நிறுத்தப்பட்டு கைது செய்யப்பட்டனர்.



கோவில்பட்டியில்...



மதுரையில்...

ஏகாதிபத்திய கைக்கூலி மன்மோகன்சிங் ஆட்சியில் நாடு வேகவேகமாக அடிமைப்படுத்தப்பட்டு வரும் சூழலில், இப்போராட்டம் மேலும் முக்கியத்துவம் பெற்றதோடு உழைக்கும் மக்களிடம் புதிய நம்பிக்கையை ஊட்டுவதாகவும் அமைந்தது. இடது-வலது கம்யூனிஸ்டு கட்சிகளிலுள்ள மூத்த தோழர்கள் பலர், ''இதுதான் உண்மையான, புரட்சிகர போராட்டம்; நீங்கள் தான் உண்மையான புரட்சியாளர்கள்'' என்று போராட்டத்தில் ஈடுபட்ட தோழர்களைக் கட்டித் தழுவி வாழ்த்தினர். இப்போராட்டத்தை விளக்கி பிரச்சாரத்தில் ஈடுபட்ட தோழர்களைப் பாராட்டி, சென்ற இடமெல்லாம் உழைக்கும் மக்கள் உணவும் தேநீரும் நன்கொடையும் அளித்து ஆதரித்தனர்.

தமிழகத்தில் புரட்சிகர அமைப்புகள் கோக் மற்றும் பன்னாட்டுக் கம்பெனிகளின் பொருட்களை எரிக்கும் இப்போராட்டத்தை நடத்துவது முதன்முறையல்ல. ஏற்கெனவே 2001-ஆம் ஆண்டில் இதே போராட்டத்தை விரிவான பிரச்சாரத்துடன் இவ்வமைப்புகள் நடத்தியபோது, பல பகுதிகளில் தடைவிதிக்கப்பட்டு முன்னணியாளர்கள் கைது செய்யப்பட்டனர். இப்போது மீண்டும் அதே போராட்டத்தை நடத்தும்போதும் தடைவிதிக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர். நடப்பது உலக வர்த்தகக் கழகத்தின் நாட்டாமை; நாடாள்வதோ பன்னாட்டுக் கம்பெனிகள் என்பதற்கு இதைவிட வேறென்ன ஆதாரம் வேண்டும்?

ஆனால், நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகளால் மூட்டப்பட்டுள்ள இந்த ஏகாதிபத்திய எதிர்ப்புத் தீயை கைதுகள்-தடைகளால் ஒருக்காலும் அணைத்துவிட முடியாது. இது சுதந்திரப் போராட்டத்தீ! அது காட்டுத் தீயாக நாடெங்கும் பற்றிப் படர்ந்து மறுகாலனியாதிக்கத்தைச் சுட்டுப் பொசுக்கி சாம்பலாக்காமல் ஓயாது.

**- பு.ஜ. செய்தியாளர்கள்.**

---

**11-ஆம் பக்கத் தொடர்ச்சி**

மட்டுமின்றி, பகற்கொள்ளையடிக்கும் அனைத்து தனியார் சுயநிதிக் கல்லூரிகளுக்கும் பொருந்தும்.

அண்மையில் சென்னை ஏற்றுமதித் தொழில் வணிக வளாகத்தில் **(MPEZ)** கொத்தடிமைகளாக உழலும் தொழிலாளர்கள், தனியார் நிறுவனங்கள் இந்தியத் தொழிற்சட்டங்களை மதித்து நடக்கக் கோரி போராட்டம் நடத்தி கைதாகினர். தனியார் நிகர்நிலைப் பல்கலைக் கழக மாணவர்கள் தொழில்நுட்பக் கவுன்சிலின் அங்கீகாரத்தைப் பெறக் கோரி போராட்டம் நடத்தி அடக்குமுறையைச் சந்தித்துள்ளார்கள். அங்கே தனியார்-அந்நிய தொழில் முதலாளிகள்; இங்கே தனியார் கல்வி முதலாளிகள். இரு தரப்புமே சட்டங்களை மதிப்பதில்லை. பகற்கொள்ளையையும் கொத்தடிமைத்தனத்தையும் அடக்குமுறையையும் நிறுத்துவதில்லை. நீதிமன்றமோ அரசாங்கமோ தலையிட்டு தடுத்து நிறுத்துவதுமில்லை. இதுதான் தனியார்மயத்தின் மகிமை!

சுயநிதி கல்வி நிறுவனங்கள் வைத்து நடத்துவதென்பது ஓட்டுக் கட்சி அரசியல் போலவே கோடி கோடியாய் பணம் கொழிக்கும் தொழில். எனவேதான் அரசியல் கிரிமினல்கள், சாராய ரௌடிகள், கருப்புப் பண முதலைகள் - நடிகர்கள், ஓட்டுக்கட்சி பிரமுகர்கள் மட்டுமின்றி சங்கரமடமும் மேல்மருவத்தூர் பீடமும் சுயநிதி கல்வி நிறுவனங்களை நடத்துகின்றன. எனவேதான் எல்லா ஓட்டுக் கட்சிகளும் இவ்வளவு போராட்டங்களுக்குப் பின்னரும் தனியார் கல்வி வியாபாரம் குறித்து வாய் திறக்க மறுக்கின்றன.

இந்நிலையில், மாணவர் ராபின் வாஸ் மரணத்துக்குக் காரணமான ஜேப்பியாரைக் கைது செய்து சிறையிலடைப்பது, தொழில்நுட்பக் கவுன்சிலின் அங்கீகாரம் பெறாத எஸ்.ஆர்.எம் - சத்தியபாமா முதலான நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களை அரசே ஏற்று நடத்துவது, அனைத்து தனியார் சுயநிதிக் கல்லூரிகளையும் அரசுடைமையாக்குவது ஆகிய உடனடிக் கோரிக்கைகளுடன் மாணவர்களும் பெற்றோரும் ஆசிரியர்களும் ஜனநாயக இயக்கங்களும் போராட வேண்டும். ஓட்டுக் கட்சிகளைப் புறக்கணித்து, தனியார்மயத்துக்கு எதிரான போராட்டமாக இதை வளர்த்தெடுக்கவும் வேண்டும்.

**— பு.மா.இ.மு. உதவியுடன்**
**பு.ஜ. செய்தியாளர்கள்.**

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

களை விறகாக்கினோம். பருத்தி விலை அடிமாட்டு விலைக்கு வீழ்ந்து விட்டது. உற்பத்திச் செலவோ 5 மடங்கு அதிகரித்து விட்டது. விலை வீழ்ச்சியால் இதர பயிர் சாகுபடிகளும் கட்டுபடியாகவில்லை. வங்கியில் வாங்கிய கடனைக் கட்ட முடியாததால், புதிதாக அங்கு கடன் தர மறுக்கிறார்கள். கந்து வட்டிக்காரர்களிடம் 10 வட்டி - 12 வட்டிக்குக் கடன் வாங்கி போண்டியாகி நிற்கிறோம்'' என்று விம்முகிறார் சவாண் எனும் விவசாயி.

தாராளமயமாக்கலுக்குப் பிறகு சந்தையின் மீதான கட்டுப்பாட்டை அரசு தளர்த்தியது. பருத்தி கொள்முதல் நிலையங்களை அரசு படிப்படியாக மூடியது. அமெரிக்க, ஐரோப்பிய பருத்தி விவசாயிகளுடன் போட்டி போட்டுக் கொண்டு முன்னேறுமாறு விவசாயிகளுக்கு உபதேசித்தது. ஆனால், அந்நாடுகளின் விவசாயிகளுக்கு அரசாங்கம் பல்லாயிரம் கோடி மானியம் கொடுத்து ஆதரிக்கிறது. இந்திய விவசாயிகளுக்கோ உலகவங்கி உத்தரவுப்படி ஏற்கெனவே கொடுக்கப்பட்ட மானியமும் வெட்டப்படுகிறது. இந்நிலையில் விவசாயிகள் எப்படி போட்டி போட முடியும்?

மேலும், இந்திய ஆட்சியாளர்கள் தாராளமயமாக்கலின் கீழ், இறக்குமதிக்கான கட்டுப்பாடுகள் அனைத்தையும் நீக்கிவிட்டனர். வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் பருத்திக்கு 10% தான் இறக்குமதி தீர்வை விதிக்கப்படுகிறது. இதனால் கப்பல் கப்பலாக வெளிநாட்டுப் பருத்தி குவிகிறது. அதன் காரணமாக, உள்நாட்டுப் பருத்தி கடும் விலை வீழ்ச்சிக்குத் தள்ளப்பட்டுள்ளது. பத்தாண்டுகளுக்கு முன்பு கச்சா பருத்தியின் விலை ஒரு கிலோ ரூ. 100 என்று இருந்தது. இன்று அதன் விலை பாதியாகச் சரிந்துவிட்டது.

ஒருபுறம், அன்னிய இறக்குமதியால் விலை வீழ்ச்சி; மறுபுறம் உற்பத்திச் செலவு அதிகரிப்பு, மானியக் குறைப்பு, மின்கட்டண உயர்வு என இரட்டைத் தாக்குதலின் கீழ் சிக்கிப் பருத்தி விவசாயிகள் கடனாளியாகி போண்டியாகிப் போனார்கள். இந்த நச்சுச் சூழலிலிருந்து மீள வழிதெரியாமல் அடுத்தடுத்து தற்கொலை செய்து கொண்டு மாண்டு போனார்கள்.

விதர்பா பிராந்தியமே வாழ்விழந்து பரிதவித்த நிலையில், வேலையில்லா விவசாய இளைஞர்கள் சிலர், மும்பைக்கு வேலைத் தேடிச் சென்று அங்கு கட்டுமானப் பணிகளில் கூலி வேலை செய்தனர். ஆனால் அங்கு வாரத்திற்கு 2 நாட்கள்தான் வேலை கிடைத்தது. சாலையோர நடைபாதைகளில் இரவில் படுத்துறங்கி, வேலை தேடி அலைந்த அவர்களுக்குத் தொடர்ச்சியாக வேலை கிடைக்கவில்லை. வேறு வழியின்றி திருட்டு ரயிலேறி அவர்கள் ஊருக்குத் திரும்பி விட்டனர். இப்படி பல கிராமத்து இளைஞர்கள் வேலை தேடி மும்பை, தானே, புனே, நாக்பூர் என பெருநகரங்களுக்கு ஓடுவதும், அங்கும் வேலை கிடைக்காமல் பட்டினியோடு ஊருக்குத் திரும்புவதும் அவலத் தொடர்கதையாக நீள்கிறது.



கந்துவட்டிக் கடனை அடைக்க கிராமத்தை விற்கப் போவதாக அறிவித்துக் கட்டப்பட்டுள்ள பதாகை.

வங்கி அதிகாரிகளும் கந்துவட்டிக்காரர்களும் கடனைக் கட்டச் சொல்லி எச்சரித்ததால், அவமானம் தாளாமல் கடந்த டிசம்பர் 16-ஆம் தேதியன்று ஜகதீஷ் தேஷ்முக் என்ற விவசாயி தற்கொலை செய்து கொண்டு மாண்டு போனார். கணவனைப் பறிகொடுத்த அவரது மனைவி, காய்கறி பயிரிட்டு குடும்பத்தைக் காப்பாற்றப் போராடிக் கொண்டிருக்கிறார். அவரது 12 வயது மகன் பள்ளிப் படிப்பை நிறுத்தி விட்டு ஊர்ஊராக காய்கறி விற்கிறான். ''மின் வாரிய அதிகாரிகளோ, மின்கட்டண பாக்கியை உடனே செலுத்த வேண்டுமென எச்சரிக்கிறார்கள். மின்சாரம் துண்டிக்கப்பட்டால் காய்கறிகூட பயிரிட முடியாமல் நாங்கள் பிச்சை எடுக்க நேரிடும்'' என்று கண்கள் குளமாகக் கதறுகிறார் தேஷ்முக்கின் மனைவி.

நாடெங்கும் தாராளமயம் தோற்றுவித்துள்ள பயங்கரத்துக்கும் அவலத்துக்கும் இன்னுமொரு சாட்சிதான் மகாராஷ்டிரா விவசாயிகளின் ''சிறு நீரக விற்பனை மையங்கள்.'' தொழில் வளர்ச்சியில் முதலிடம் வகிக்கும் பணக்கார மாநிலமாகச் சித்தரிக்கப்படும் மகாராஷ்டிராவின் நிலைமையே இப்படி இருக்கும்போது, நாட்டின் பிற பகுதிகளைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை. விலை வீழ்ச்சியால் தக்காளியைத் தெருவில் கொட்டிவிட்டு கடன் சுமை தாளாமல் தற்கொலை செய்து கொள்ளும் விவசாயிகள், ஆலையிலிருந்து வெட்டுவதற்கான உத்தரவு வராமல் நட்டப்பட்டு, கரும்புக் காட்டையே கொளுத்தும் விவசாயிகள், உரிய விலை கிடைக்காமல் காய்கறிகளையும் பழங்களையும் தெருவிலே கொட்டி வேதனையை வெளிப்படுத்தும் விவசாயிகள், வேலை கிடைக்காமல் நாடோடிகளாக அலையும் விவசாயிகள் - என நாடெங்கும் விவசாயிகள் படும் அவலத்தை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது.

நாட்டின் முதுகெலும்பான விவசாயிகளின் உயிர் மலிவாகி விட்டது; உடல் உறுப்புகள் மலிவாகி விட்டது. நாடு சுடுகாடாகிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில், நாடு நாலுகால் பாய்ச்சலில் முன்னேறிக் கொண்டிருப்பதாக ஆட்சியாளர்கள் அவிழ்த்துவிடும் அண்டப் புளுகை இன்னமும் நம்பிக் கொண்டிருக்கப் போகிறோமா? அல்லது இந்த அவமானக் கறையைத் துடைத்தெறிய தாராளமயத்துக்கும் துரோக ஆட்சியாளர்களுக்கும் எதிராகப் போராடப் போகிறோமா?

• குமார்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGARAJ.

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM

REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER NO.42648/85

Regn.No.TN/CC(S)Dn/190/06-08

ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளி

# தோழர் பகத்சிங் கின்

75-வது நினைவுநாளில் (23.3.06)

தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகள் நடத்திய

# கோக் மற்றும் பன்னாட்டு நிறுவனப் பொருட்கள் எரிப்புப் போராட்டம்!




## பொங்கி எழட்டும் சுதந்திர வேட்கை!
## பொசுங்கி அழியட்டும் மறுகாலனியாதிக்கம்!

படிப்பகம்